# ஸ்ரீராமாநுஜன் 144

P. B. ANNANGARACHARYA, L. Kancheepuram.

ஆசிரியர்: ஸ்ரீ காஞ்சி, P. B. அண்ணங்கராசாரியர்.

வருடச்சந்தா ரூ. 5.



1960 டிசம்பர்மீ சார்வரிஹு மார்கழிமீ.

# ஸ்ரீராமாநுஜன் 144

சென்னை ஸத்க்ரந்தப்ரகாஸன ஸபா மூலமாக மாதந்தோறும் வெளிவரும்பத்திரிகை.

ஆசிரியர்: ஸ்ரீ காஞ்சி. P. B. அண்ணங்கராசாரியர்.

| ஸம்புடம் 12 | 1960ஆு டிசம்பர்மீ<br>சார்வரிஆு மார்கழிமீ | மலர் 12 |
|---|---|---|


## திருவாய்மொழி நூற்றந்தாதி—35

வீற்றிருக்கு மால்விண்ணில் மிக்க மயல்தன்னை
ஆற்றுதற்காத் தன்பெருமை யானதெல்லாம்—தோற்றவந்து
நன்று கலக்கப்போற்றி நன்குகந்து வீறுரைத்தான்
சென்றதுயர் மாறன் தீர்ந்து.

| | |
|---|---|
| விண்ணில் | பரமபதத்தில் |
| வீற்றிருக்கும் மால் | எழுந்தருளி யிருக்கின்ற எம்பெருமான் |
| மிக்க மயல் தன்னை | (கீழ்த்திருவாய்மொழியில் ஆழ்வார்க்குண்டான) மிகுந்த வியாமோஹத்தை |
| ஆற்றுதற்கு ஆ | தணிவிக்கைக்காக |
| தன் பெருமை ஆனது எல்லாம் தோற்ற வந்து | தன் குண விக்ரஹாதி வைபவங்களெல்லாம் பிரகாசிக்குமாறு இங்கே வந்து |
| நன்று கலக்க | தம்மோடு நன்றாகக்கலக்க (அதனை) |
| மாறன் | ஆழ்வார் |
| போற்றி | வாயாரவாழ்த்தி |
| நன்கு உகந்து | மிகவும் களிப்படைந்து |
| சென்ற துயர் தீர்ந்து | கிகழ்ந்த துக்கங்கள் ஒழியப் பெற்று |
| வீறு உரைத்தான் | உபய விபூதியிலும் தாம் வாசி பெற்றவரான பெருமையை அருளிச் செய்தார். |

* * *—கீழே * மண்ணையிருந்து துழாவியில் அளவு கடந்த வியாமோஹத்தையடைந்த ஆழ்வாருடைய அந்த வியாமோஹத்தைத் தணியச்செய்யும் பொருட்டுப் பரமபத நிலயனான எம்பெருமான் திருப்புளியாழ்வாரடியிலே யெழுந்தருளித் தன்னுடைய அஸாதாரணாகாரத்தைக் காட்டிக்கொடுத்து ஸம்ச்லேஷிக்க அதனால் ஆழ்வார் உள்ளங்குளிர்ந்து வாயார வாழ்த்தித் துயர்தீரப்பெற்று, உபயவிபூதியிலும் தமக்கு நிகரில்லாமையாகிற தமது பெரு மேன்மையை * வீற்றிருந்தேழுலகு திருவாய்மொழியில் அருளிச்செய்தாரென்றதாயிற்று.

*மண்ணையிருந்தென்கிற கீழ்த்திருவாய்மொழி பெருவிடாயோடே சென்றது. இங்ஙனே ஆழ்வார் விடாய்க்கவேணுமென்பதுதானே எம்பெருமானுடைய திருவுள்

ளம்! சோறு உண்பதற்குப்பசி உபகரணமாமாப்போலே எம்பெருமானை யநுபவிப்ப தற்கு அளவுகடந்த ஆசையன்றோ உபகரணமாவது. அந்த ஆசையுண்டானலன்றித் தன்னுடைய பரிபூர்ணானுபவத்தைத் தந்தருள எம்பெருமான் திருவுள்ளம் பற்றுவ தில்லை. அத்தகைய ஆசை *முனியே நான்முகனில் உண்டாகின்றது. "முடிந்த அவா" என்பது அங்குத்தான். அதற்குக் கீழுள்ள தெல்லாம் அந்த அவாவுக்குப் பண்ணுகிற க்ருஷியாயிருக்கும். எம்பெருமான் இடையிடையே வந்து காட்சிதாரா தொழியில் ஆழ்வாரை இழக்க நேருமே. "தொண்டர்க்கமுதுண்ணச் சொன்மாலை கள் சொன்னேன்" என்னும்படி பகவத்குணரஸிகர்களுக்குத் தண்ணீர்ப்பந்தல் வைக்கைக்காகவன்றோ ஆழ்வாரை இங்கு வைத்திருப்பது. ஸம்ச்லேஷ விச்லேஷங் கள் மாறிமாறி நடந்தாலல்லது எம்பெருமானுடைய திருவுள்ளம் நிறைவேற வழி யில்லை; நம் போலியர்களின் பாக்கியமும் பரிபக்குவமாக வழியில்லை.

இந்த *வீற்றிருந்துபதிகத்தில் ஆழ்வார்க்குச் செல்லுகிற ஆனந்தம் பேச்சுக்கு நிலமன்று. "இனி யென்னகுறை யெழுமையுமே?" என்றும் "இனியாவர் நிகரகல் வானத்தே" என்றும் மார்வு தட்டிப் பேசலாம்படி யாக்கியருளினான் எம்பெருமான். இத்திருவாய்மொழியின் அமைப்பை நோக்குமிடத்து இதற்கு மேற்பட்ட பரிபூர்ணா நுபவம் வேறில்லை என்றே சொல்லலாம்படியிராநின்றது. ஆனதுபற்றியே இத் திருவாய்மொழி * சூழ்விசும்பணி முகிலுக்கு அடுத்த திருவாய்மொழியாக இருந் திருக்கலாம் என்று நஞ்சீயர் ரஸோக்தியாக அருளிச் செய்வராம்.

கீழ்த்திருவாய்மொழியில் போலிகண்டு ப்ரமித்து மயங்கி ஆற்றாமைமீதூர்ந்த ஆழ்வாருக்கு எம்பெருமான் உபயவிபூதிநாதனாயிருக்கிற தன் படிகளில் ஒன்றுங் குறையாதபடி முற்றூட்டாகக் காட்டிக்கொடுத்து 'ஆழ்வீர்! நம்முடைய படிக ளெல்லாங் கண்டீரே; நமது இந்த ஐச்வர்யமெல்லாம் நிறம்பெற்றதாவது உம்மு டைய திருவாக்காலே ஒழுங்குபடப் பாடினாலாயிற்று. ஆகவே பாடிக்காணீர்' என்று சொல்லி ஆழ்வார் திருக்கையிலே தாளத்தைக்கொடுக்க, அவ்விருப்புக்குப் பல்லாண்டுபாடி மகிழ்கின்றாய்ச் செல்லுகிறது இத்திருவாய்மொழி.

---

## விலாஸ மாறுதல்

பத்திராதிபர் மார்கழி முழுவதும் சென்னைமாநகரில் எழுந்தருளியிருப்பதால் 13—1—61 தேதிவரையில் கடிதங்களெழுதுவதற்கும் M. O. அனுப்புவதற்கும் கீழ்க் கண்ட விலாஸம் கவனிக்கத்தக்கது.

P. B. அண்ணங்கராசாரியர் ஸ்வாமி,
48, கோவிந்தப்பநாய்க்கன் தெரு, ஜி. டி. மதராஸ்

இப்படிக்கு,
க்ரந்தமாலா ஆபீஸ் மானேஜர்.

K. P. Chandrakant

# கண்ணனும் திருப்பாணாழ்வாரும்.

---

ஸ்ரீ ராமானுஜன் இதழ் 120-ல் 'கண்ணனும் கலியனும்'' என்கிற வியாஸமொன்று வெளியிட்டிருந்ததை அன்பர்கள் யாவரும் வாசித்திருக்கிறார்கள். அதில் கண்ணனுக்கும் திருமங்கையாழ்வார்க்கும் பன்னிரண்டு ப்ரகாரங்களாலே ஸாம்யம் நிர்வஹிக்கப்பட்டிருக்கின்றது. விபுலமான உரையோடுங் கூடின அந்த ச்லோகத்தைச் சில ரஸிகர்கள் கண்டபாடமும் செய்திருக்கிறார்கள். அவ்வண்ணமாகவே, நேற்று திருப்பாணாழ்வார் திரு நக்ஷத்திரத்தன்று கண்ணனுக்கும் திருப்பாணாழ்வார்க்கும் எட்டு வகைகளாலே ஸாம்யமிட்டு விஜ்ஞாபிக்கப்பட்ட சுலோகம் இங்கு உரையோடுங்கூட வெளியிடப்படுகின்றது.

𑌨𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑍈𑌕𑍍𑌯𑌾𑌨𑍍𑌮𑍁𑌨𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑌸𑍍𑌤𑍁𑌤𑌵𑌿𑌭𑌵𑌤𑌯𑌾 𑌨𑌦𑍍𑌯𑍁𑌪𑌾𑌨𑍍𑌤𑌪𑍍𑌰𑌿𑌯𑌤𑍍𑌵𑌾𑌤𑍍
𑌰𑌙𑍍𑌗𑌾𑌵𑌾𑌸𑍋𑌤𑍍𑌸𑍁𑌕𑌤𑍍𑌵𑌾𑌦𑌮𑌲𑌵𑌿𑌮𑌲𑌵𑌾𑌗𑍍𑌦𑌾𑌨𑌤𑍋 𑌬𑌾𑌹𑍍𑌯𑌭𑌾𑌵𑌾𑌤𑍍 ।
𑌗𑍀𑌤𑍋𑌦𑌞𑍍𑌚𑌤𑍍𑌪𑍍𑌰𑌤𑌤𑍍𑌵𑌾𑌦𑍍𑌵𑌟𑌦𑌲𑌶𑌯𑌨𑌪𑍍𑌰𑌾𑌜𑍍𑌯𑌗𑌵𑍍𑌯𑍋𑌪𑌭𑍋𑌗
𑌪𑍍𑌰𑌾𑌵𑌣𑍍𑌯𑌾𑌤𑍍𑌪𑌾𑌣𑌸𑍂𑌰𑌿𑌰𑍍𑌵𑌿𑌲𑌸𑌤𑌿 𑌵𑌸𑍁𑌦𑍇𑌵𑌾𑌤𑍍𑌮𑌜𑍇𑌨𑍋𑌪𑌮𑍇𑌯𑌃 ॥

நக்ஷத்ரைக்யாந் முநீந்த்ரஸ்துதவிபவதயா நத்யுபாந்தப்ரியத்வாத்
ரங்காவாஸோத்ஸுகத்வாத் அமலவிமலவாக்தாநதோ வாஹ்யபாவாத்.
கீதோதஞ்சத்ப்ரதத்வாத் வடதளசயநப்ராஜ்யகவ்யோபபோக
ப்ராவண்யாத் பாணஸூரிர் விலஸதி வஸுதேவாத்மஜேநோபமேய:.

## இனி ச்லோகார்த்த விவரணம்

1. 𑌨𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑍈𑌕𑍍𑌯𑌾𑌤𑍍—நக்ஷத்ரைக்யாத். கண்ணன் திருவவதரித்ததும் திருப்பாணாழ்வார் திருவவதரித்ததும் ரோஹிணீ நக்ஷத்திரத்திலாதலால் இத்தகைய நக்ஷத்ர ஸாம்யம் முதன்மையான ஸாம்ய ஹேது. "அத்தத்தின் பத்தாநாள் தோன்றிய வச்சுதன்" "நீ பிறந்த திருவோணமின்று" இத்யாதிகளான பெரியாழ்வார் ஸ்ரீஸூக்திகளாலே கண்ணனுடைய திருவவதார நக்ஷத்ரம் திருவோணமென்று தெரியவருகின்றதேயென்று கலங்கவேண்டா; "𑌶𑍍𑌰𑌵𑌣𑌾 𑌨𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌂 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌰𑍍𑌦𑍇𑌵𑌤𑌾—ச்ரோணா நக்ஷத்ரம் விஷ்ணுர் தேவதா." என்கிற ச்ருதியை யடியொற்றிப் பெரியாழ்வாருளிச்செய்தபடி. ஸ்ரீ நரஸிம்ஹனுடைய திருவவதார நக்ஷத்ரத்தையும் அவ்வாழ்வார் ஸ்வாதியாகச் சொல்லாமல் திருவோணமாகவே சொல்லியிருப்பதை "திருவோணத் திருவிழவிலந்தியப் போதிலரியுருவாகி" என்ற திருப்பல்லாண்டு பாசுரத்தினால் அறியலாம். எம்பெருமான் எந்தத் திருநக்ஷத்திரத்தில் அவதரித்தாலும் அது விஷ்ணு

நக்ஷத்ரமாகிய திருவோணத்தின் அம்ஶமாகவே யிருக்குமென்பது ஆன்றோர் கொள்கை. ஆக, கண்ணனுடையவும் திருப்பாணாழ்வாருடையவும் திருவவதார நக்ஷத்திரம் ரோஹிணியே யென்க. இதை யிட்டுச் சொல்லும் ஸாம்யம் உபபந்நமே.

2. முநீந்த்ரஸ்துதிவிஷயதயா—முநீந்த்ரஸ்துதிவிஷயதயா. கண்ணன் பரமாகப் பொருள் கொள்ளும்போது முநிஸ்துதி விஷயதயா, இந்த்ரஸ்துதி விஷயதயா என்று பிரித்துக்கொள்ளவேணும். * இருக்கொடுநீர் சங்கில் கொண்டிட்டு எழில் மறையோர் வந்து நின்றார் * என்பது முதலான பாசுரங்களினால் திருவாய்ப்பாடியிலே முனிவர்களும் வந்து துதித்திறைஞ்சினமையுணர்க. இனி இந்த்ரஸ்துதி விஷயத்வம் கோவர்த்தநோத்தரண ஸமயத்தில் விசேஷித்துக் காணத்தக்கது. "வழுவொன்று மில்லாச் செய்கை வானவர்கோன் வலிப்பட்டு முனிந்து விடுக்கப்பட்ட மழைவந்தெழுநாள் பெய்து" என்கிறபடியே பசிக்கோபத்தாலே இந்திரன் மேகங்களை ஏவி ஏழு நாள் விடாமழை பெய்வித்து ஆயர்களையும் ஆநிரையையும் நலிய, கண்ணபிரான் ஒருவர் மேலும் ஒரு மழைத் துளியும் விழாதபடி "செப்பாடுடைய திருமாலவன் தன் செந்தாமரைக் கைவிரலைந்தினையும் கப்பாக மடுத்து மணி நெடுந்தோள் காம்பாகக் கொடுத்துக் கவித்தமலை" என்கிறபடியே அநாயாஸமாகத் தாங்கி நின்ற கோவர்த்தன மலையினால் காத்தருள, இவ்வதிமாநுஷ சேஷ்டிதத்திற்கு வியந்த இந்திரன் திருவாய்ப்பாடியேற வந்து கண்ணபிரானை வணங்கித் துதித்தமை ஸ்ரீ விஷ்ணுபுராண ஸ்ரீ பாகவதாதிகளில் ப்ரஸித்தம். கோவிந்த பட்டாபிஷேகம் செய்ததும் அப்போதே. ஆக, முனிகளுடையவும் இந்திரனுடையவும் ஸ்துதிக்கு இலக்கானவன் கண்ணன் என்றதாயிற்று. இனி ஆழ்வார் பரமான பொருளில், முநீந்த்ர பதத்தினால் லோகஸாரங்க மஹாமுநி விவக்ஷிதர். அவரால் ஸ்துதிக்கப்பட்டவர் இவ்வாழ்வாரென்பது இவருடைய வைபவத்தில் ப்ரஸித்தம். இவ்வாழ்வார் அரங்கனுக்குப் பாடல் திருத் தொண்டு செய்ய உத்தேசித்துப் புறப்பட்டு, தாம் தாழ்ந்த குலத்தில் வளர்ந்தவராதலால் உபய காவேரிமத்தியிலுள்ள ஸ்ரீரங்க திவ்ய க்ஷேத்திரத்தில் அடியிடத்துணியாமல் தென் திருக் காவேரியின் தென் கரையில் திருமுகத்துறைக் கெதிரிலே யாழுங்கையுமாக நின்று கொண்டு நம் பெருமாளைத் திசை நோக்கித் தொழுது அநேக திவ்ய கீர்த்தனங்களைப் பாடிக் கொண்டிருக்க, திருவரங்கச் செல்வனுக்குத் தீர்த்த கைங்கரியம் செய்கிற லோக ஸாரங்க மஹாமுனி ஒரு நாள் தீர்த்தங் கொண்டுபோதற்குப் பொற்குடத்தை யெடுத்துக் கொண்டு பொன்னித் துறையையடைகையில், அருகே மெய்மறந்து பாடிக் கொண்டிருந்த இவ்வாழ்வாரைப் பார்த்து அருவருத்து 'எட்டச் செல்' என்று பலமுறை பணிக்கவும் இவர் இவ்வுலகத் தொடர்பை மறந்திருந்ததனால் அம்மொழியைச் செவியுறாமல் வாளாநின்றிட, இவர்மீது பலர் கற்களை விசி யெறிய, அவ்வன்சிலைகள் இவருடைய

மெல்லுடல் மேல் நன்கு பட்டிடவும் இவர் பக்தி பாரவச்யத்தாலே சிறிதும் ஸ்பர்ச வுணர்வின்றிச் சலியாதிருக்க, அப்பொழுது இவரது உடம்பிலும் உள்ளத்திலும் ஈஷத்தும் வருத்தம் காணப்படவில்லையாயினும் பக்தர்களது அந்தரங்கத்தில் அமர்ந்திருக்கின்ற அரங்கநாதன் திருவுள்ளம் மிகக் கலங்கி அப்பொழுது தன்னிடம் திருமஞ்சனத் தீர்த்தம் கொண்டுவந்து சேர்த்த லோகஸாரங்கமஹாமுனியை நோக்கி 'உடனே திருப்பாண்பெருமாளிடம் சென்று அபசாரக்ஷாமணம் செய்து கொண்டு அவரைத் தோள்களில் எழுந்தருளப் பண்ணிக்கொண்டு வாரும்' என்று நியமிக்க, அக்கட்டளையைச் சிரமேற்கொண்ட அந்த முநீந்திரர் வந்து தொழுது துதித்ததனால் முநீந்த்ரஸ்துதி விஷயத்வம் இவர்க்கு நன்கு பொருந்திற்று.

3. நத்யுபாந்த ப்ரியத்வாத்–நத்யுபாந்த ப்ரியத்வாத். * தூயபெருநீர் யமுனைத் துறைவனை கண்ணன் "காளிந்தீரஸிகாய' என்று தசாவதாரஸ்தோத்ரத்தில் பணித்தபடியும், "ராதாமாதவயோர் ஜயந்தி யமுநாகூலே ரஹ: கேலய:" என்று கீத கோவிந்த மங்கல ச்லோகத்தின்படியும் யமுனை யாற்றின் கரையிலே வஸிப்பதில் ப்ரீதியுள்ளவன். பரம பதத்தில் வஸித்தால் விரஜாதீரவாஸத்தில் ப்ரியன்; ஸ்ரீராமாவதாரத்தில் ஸரயூதீரவாஸத்தில் ப்ரியன். இங்ஙனேயாயிற்று இவனுடைய நத்யுபாந்த ப்ரியத்வம் ப்ரஸித்தமானபடி. திருப்பாணழ்வார்க்கும் இஃது உள்ளது. "உபயே காவேர்யோர் மத்யே..." என்று இவருடைய தனியனிலே உள்ளது. திருமஞ்சனக் காவேரியின் பரிஸரத்தில் குடில் கட்டி வாழ்ந்தவரன்றோ இவர்.

4. ரங்காவாஸோத்ஸுகத்வாத் — ரங்காவாஸோத்ஸுகத்வாத். கண்ணன் பரமான பொருளில் ரங்கமாவது கூத்தாடுமிடம். அதில் வஸிக்க ருசி கொண்டவன் கண்ணன். * குடங்களெடுத் தேறவிட்டுக் கூத்தாடவல்ல வெங்கோவே * சீரார் குடமிரண்டேந்திச் செழுந்தெருவே ஆராவெனச் சொல்லி ஆடுமதுகண்டு * கன்றப் பறை கறங்கக் கண்டவர்தங் கண்களிப்ப மன்றில் மரக்கால் கூத்தாடினன் காணேடீ * என்றிவை முதலான பாசுரங்கள் காண்க. "காளியபணி ரங்க ரங்காவாஸிகாரங்க விஹார..." என்ற தசாவதாரஸ்தோத்ர ஸூக்தியில் ரங்கபத ப்ரயோகமே உள்ளது காண்க. இனி ஆழ்வார்பரமான பொருளில், விவரிக்கவேணுமோ? நிசுலாபுரி யென்கிற உறையூரில் திருவவதரித்த இவ்வாழ்வார் அவ்வூரில் வாஸத்தைவிட்டு ஸ்ரீ ரங்க வாஸத்தில் உத்ஸுகராயிருந்தது உணர்க. இதற்கு மற்றொருபடியாகவும் பொருள் கொள்ளலாம். ரங்காவாஸ: என்று ஸ்ரீரங்கநாதனைச் சொல்லிற்றாகி, அப்பெருமானிடத்தில் உத்ஸுகர்— "அண்டர் கோனணியரங்கனென்னமுதினைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணவே" என்றிருந்தவர்—என்னவுமாம்.

5. ஊஉ௵ விஉ௵ வாஹாநதஃ—அமல விமல வாக்தாநத:. கண்ணன் பரமான பொருளில் 'அமல விமல' என்றது அத்யந்தநிர்மல மென்றபடி. "தெதீளஃ வடூதல் வுரயிவீபரீயெ௸ ஹிஉவாநு ஸகஜூஹவெல! ஸுஷெூதாயநியிஃ கூரஷெ! நமெ ஜொவஂ வசொஹவெல—த்யௌஃ பதேத் ப்ருதிவீ சீர்யேத் ஹிமவாந் சகலீப வேத், சுஷ்யேத் தோயநிதி: க்ருஷ்ணே! ந மே மோகம் வசோ பவேத்" இத்யாதிகளான அமோக வாக்குக்களை யருளினவன் கண்ணபிரான் ஆழ்வாரோவென்னில்; அமலன் விமலன் நிமலன் நின்மலன் என்னுஞ் சொற்களைக்கொண்ட திவ்யஸூக்திகளையருளிச் செய்தவர். இவ்வாழ்வார்தாம் தம்மைப் பரமநிஹீநராக அநுஸந்தித் திருக்குமவராகையாலே ஸன்னிதியின் அருகிலும் வரத்தகாத தாம் ஸன்னிதிக்குள்ளே புகுவதனால் பெருமாளுக்கு என்ன அத்வயமுண்டாயிடுமோ! என்று அஞ்சியிருந்தார்; அப்பெருமான்தான் இவருடைய வருகையைத் தனக்குப் பெருப்பேருக நினைத்து, அந்த நினைவு வடிவிலே தொடைகொள்ளலாம்படி திருமேனி மிகமிகப் புகர்பெற்று விளங்கக் கண்டாராய் அதிசயித்து அமலன் விமலன் நிமலன் நின்மலனென்றருளிச்செய்தாராயிற்று.

6. வாஹநூஹாவாக—வாஹ்யபாவாத். வஹிக்கப்படும் தன்மையினலேயென்றபடி. பரமபுருஷன் புள்ளூர்தியாதலால் "பறவையேறு பரம்புருடா" என்றபடி பெரியதிருவடியாலே வஹிக்கப்படுபவன் என்பது தவிர, க்ருஷ்ணவதாரத்திலே "வீ௦ஙவீ௦நிஷண" இத்யாதிப்படியே, கைக்கு எட்டவொண்ணுதபடி உயர்ந்த விடங்களிலே *நாராருறியேற்றி நன்கமைய வைத்த நவநீதாதிகளைக் கொள்ளை கொள்வதற்குத் தன்னேடொத்த பருவத்திற் பிள்ளைகளை ஒருவன்மேலொருவனுக நிற்கவைத்து அவர்கள்மீது தானேறிநின்று பறிப்பவனுகையாலே இப்படியாலே வஹிக்கப்படுவனென்க. ஆழ்வார் முனிவாஹநரென்றே திருநாமம் படைத்தவராய் லோகஸாரங்க மஹாமுனியை வாஹனமாகக்கொண்டு ஸன்னிதியுள்ளே புகுந்தவராதலால் வாஹநூஹாவம் இவர் பக்கலிலும் குறையற்றது. "முனியேறித்தனிபுகுந்து பாட்டினுல் கண்டு வாழும் பாணர்" என்றதும் காண்க.

7. கீதொஉஞகூஙயகவாக — கீதோதஞ்சத் ப்ராதத்வாத். கீதயா உஉஞதவயஃ கூரஷணஃ; கீதெந உஉஞதவயஃ வாணஸூஙிஃ. கீதாஶாஸ்த்ரத்தையருளிச்செய்ததனுல் பரம்பின புகழுடையவர் ஸ்ரீ க்ருஷ்ணபகவான். ஆழ்வாரோவென்னில், கீதத்தினுல் [ஸங்கீதத்தினுல்] புகழ் மிக்கவர். கண்டமும் கருவியுமொக்க, கேட்பவர் செவியும் மனமும்குளிர, எம்பெருமான் திருவுள்ளமுகக்கக், கிந்நரகந்தருவர்களும் வியப்புறப் பாடினவராதலால் இந்த விசேஷணம் மிகப்பொருந்துமிவர்க்கு.

8. வடதளஶயந ப்ராஜ்யகவ்யோபபோக ப்ராவண்யாத் — வடதளஶயநப்ராஜ்யகவ்யோபபோகப்ராவண்யாத். "பாலகனென்று பரிபவஞ்செய்யேல் பண்டொருநாள் ஆலினிலைவளர்ந்த சிறுக்கனவனிவன்" என்றும் "வைத்த நெய்யுங் காய்ந்த பாலும் வடிதயிரும் நறுவெண்ணெயும் இத்தனையும் பெற்றறியே னெம்பிரான் நீ பிறந்தபின்னை" என்றும் சொல்லுகிறபடியே வடதளத்தில் சயனிப்பதிலும், தயிர் பால் நெய் வெண்ணெய் முதலான ஹவ்யங்களை புஜிப்பதிலும் ஊற்றமுடையவன் கண்ணபிரான். பாண்பெருமாளோவென்னில்; "ஆலமாமரத்தினிலைமேல் ஒருபாலகனாய் ஞாலமேழுமுண்டான் அரங்கத்தரவினணையான்" என்கிற பாசுரத்தினால் வடதளசயன விருத்தாந்தத்தையும், "கொண்டல் வண்ணனைக் கோவலனாய் வெண்ணெயுண்டவாயன்—அண்டர்கோனணியரங்கன்" என்கிற பாசுரத்தினால் அப்பெருமான் ஹவ்யங்களை யமுதுசெய்யும் விருத்தாந்தத்தையும்வருணிப்பதில் ப்ராவண்யமுடையார்.

ஆக இவ்வெட்டு விஶேஷ(ண)ங்களினாலும் [பாணஸூரி: வஸுதேவாத்மஜேந உபமேய: விலஸதி] திருப்பாணாழ்வார் கண்ணபிரானோடு ஒப்புமைபெறத்தக்கவராய் விளங்காநின்றாரென்றதாயிற்று ... .... ...

## அன்பர்களுக்கு அறிவிப்பு

இவ்விதழோடு நமது ஸ்ரீராமாநுஜனுக்குப் பன்னிரண்டாண்டு பரிபூர்த்தியடைந்துவிட்டது. இனி அடுத்த தைமாதத்தில் பதின்மூன்றாமாண்டு பிறக்கவிருக்கின்றது. இதுகாறும் இதனை ஆதரித்துவந்த ஸஹ்ருதய ஸுஹ்ருந்மணிகள் இனிமேலும் ஆதரித்துவரவேணுமென்று நாம் பிரார்த்திப்பது மிகையே. முன்னிலும் அதிகமான ஆதரவு ஏற்பட்டால் இது மேன்மேலும் அபிவிருத்தியடையப் பாங்காகும். சந்தா பாக்கியுள்ளவர்கள் நாம் தனியே கடிதமெழுதுவதை எதிர்பாராமல் அனுப்பி வடுவார்களென்று நம்பியிருக்கிறோம்.

மானேஜர்.

# திருமலையில் வித்வத் பரிஷத்து.

திருமலை திருப்பதி தேவஸ்தான அதிகாரிகள் திருவேங்கடச் செல்வனுடைய செல்வங்களை தார்மிகவழிகள் பலவற்றில் செலவிட்டுவருகிறார்களென்பது ப்ரஸித்தம. திருமலைமேல் மூன்று நாளைக்கு வித்வத்பரிஷத்து நடத்துவதாய்ச் சிலநாட்களாக மனோரதித்திருந்து, நிகழும் டிஸம்பர்மீ 10, 11, 12 தேதிகளாகிய மூன்று தினங்களில் அதனை மிகச் சிறப்பாக நடத்திவைத்தார்கள். ஷை தேவஸ்தானாதிகாரிகளில் பரிகணிதரான ராஜேஸ்ரீ சந்திரமௌலியென்று பிரஸித்தரான மினிஸ்டர் அவர்களின் ஆலோசனையே இந்த நிகழ்ச்சியில் தலைமை பெற்றதாகும். இதற்காகத் தனியே 25 ஆயிரம் ரூ. ஒதுக்கப்பட்டதாம். ஸபாமண்டபத்தின் அமைப்புமட்டும் பதினாயிரம் ரூபா செலவில் ஆயிற்றென்று சொல்லப்பட்டது. ப்ரஹ்மஸ்ரீ ச்ருங்கேரி சங்கரபீடாதிபதிகள் மூன்றுநாளும் பெரும்பாலும் பரிஷத்தை அலங்கரித்தார்கள். மேலே குறித்த சந்திரமௌலியவர்களும், ஸ்ரீ. C. P. ராமஸ்வாமி ஐயரவர்களும், ப்ரஹ்மஸ்ரீ. பதஞ்சலிசாஸ்திரிகளவர்களும் முறையே மூன்று நாட்களிலும் பரிஷத்தைத் தொடங்கி வைப்பவர்களாயிருந்தனர். ஏறக்குறைய நாற்பது வித்வான்கள் நாநாதேசங்களிலிருந்து உபஸ்திதர்களாயிருந்தனர். அவர்கள் தம்தம் யோக்யதாநுஸாரமாக ஸம்ஸ்க்ருதத்திலேயே சாஸ்த்ரார்த்த சர்ச்சைகளையும் உபந்யாஸங்களையும் அழகாக நடத்தினார்கள். வித்வான்கள் யாவரும் நன்கு ஸத்கரிக்கப்பட்டார்கள்.

இந்த பரிஷத்து இனி ஆண்டுதோறும் தவறாமல் நடந்துவருமென்று தேவஸ்தானாதிகாரிகள் உறுதியாக ப்ரஸ்தாவம் செய்தார்கள். இது மிகவும் அபிநந்தநீயமான உத்தேசமேயாகும்.

* ஸ்ரீவேங்கடேசஃ ப்ரஸீத‌து *

---

## திருப்பாவை திவ்யார்த்ததீபிகை மறு பதிப்பு

'திருப்பாவை விசேஷார்த்த வுரை' என்கிற உரைக்கு வெகு முன்னே திருப்பாவை திவ்யார்த்த தீபிகையுரை வெளிவந்திருந்தது. அது மறு பதிப்புச் செய்ய நேர்ந்து ஸமீபகாலத்தல் ஐந்தாம்பதிப்பு முடிவுபெற்றது. விலை 2 ரூ. வேண்டியவர்கள் க்ரந்தமாலா ஆபீசுக்கு எழுதிக்கொள்ளலாம்.

மானேஜர்.

ஸ்ரீ:

ஆழ்வாரெம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.



# ஸ்ரீ வைஷ்ணவ மஹாநிதி

## ஸ்ரீகாஞ்சீ. அண்ணங்கராசாரியர் எழுதியது.

### — வைணவப் பிறப்பின் வீறு —

உலகில் பிரமனால் படைக்கப்பட்ட யோனிகள் பலபல. அவற்றுள் மானிடப் பிறவியில் ஜனிக்கப்பெறுவது எவ்வளவோ விசேஷம். அதிலும் ஸ்ரீ வைஷ்ணவ குலத்தில் பிறக்கப்பெறுவது ஒப்புயர்வற்ற விசேஷம்.

### — முக்கியமான நித்யாநுஸந்தானம் —

ஜந்மாந்தர ஸஹஸ்ரநற்றவங்களின் பலனாக ஸ்ரீவைஷ்ணவகுலத்தில் ஜனிக்கப்பெற்றவர்கள் தங்களுடைய பிறப்பைப் பெருமைப்படுத்திக் கொள்ள வேண்டுவது மிகவும் அவசியம். அதற்காக ஸ்ரீவைஷ்ணவர்கள் முக்கியமாகத் தெரிந்துகொள்ள வேண்டிய விஷயங்கள் இங்குத் தொகுக்கப்படுகின்றன. இவ்விஷயங்களை ஒவ்வொருவரும் நித்தியம் அநுஸந்தானம் செய்வது நன்று. இதுவே சிறந்த நித்யாநுஸந்தானம்.

### — எம்பெருமானவதாரங்களும் ஆழ்வாராசாரியாவதாரங்களும் —

எம்பெருமான் ஸம்ஸாரிகளை உய்வித்தற்பொருட்டு மத்ஸ்ய, கூர்ம, வராஹ, நரஸிம்ஹ, வாமன, ராமக்ருஷ்ணாதி அவதாரங்களைச் செய்தமையும், அந்த விபவாவதாரங்களை இழந்தவர்களான நம்போலியர்க்கும் காட்சி தருகைக்காக, கோயில் திருமலை பெருமாள்கோயில் திருநாராயணபுரம் முதலான திவ்ய தேசங்களில் அர்ச்சாரூபியாக எழுந்தருளியிருக்கும் தன்மையும், இந்தப்பெருமைகளை நமக்கு உணர்த்துவதற்காக ஆழ்வார்களையும் ஆசாரியர்களையும் இந்நிலவுலகில் திருவவதாரம் செய்வித்து உபகரித்தமையும் ஆகிய இவற்றை நித்தியமும் நெஞ்சார அநுஸந்திப்பதே ஸ்ரீவைஷ்ணவர்களின் ஜன்ம ஸாபல்யமாகும்.

### — இவற்றைப்பற்றின விவரணங்களைச் சிறிது காட்டுவோம் —

எம்பெருமான் செய்தருளின அவதாரங்கள் எண்ணிறந்தவை. "தசாவதாரங்கள்" என்று வழங்கிவருவதைக்கொண்டு பத்து அவதாரங்களே பகவான் செய்தவையென்று எண்ணலாகாது. எண்ணிறந்த அவதாரங்களுள் மத்ஸ்ய கூர்மாதிகளான பத்து அவதாரங்கள் சிறப்பாக எடுத்துக் கூறப்படுகின்றனவத்தனை. எம்பெருமானுடைய அர்ச்சாவதாரங்களும் எண்ணிறந்தவை. பக்த சிகாமணிகளான ஆழ்வார்களின் திருவாக்கில் புகுந்து புறப்பட்ட அர்ச்சாவதாரங்களே திவ்யதேசங்கள் என வழங்கப்பெறும்.

### — ப்ரமாண ப்ரமாத்ரு ப்ரமேயங்களின் திவ்யத்வம் —

திவ்ய மென்கிற பதத்தை நமது பெரியோர்கள் ப்ரமாணப்ரமேய ப்ரமாதாக்களில் தகுதி நோக்கி வெகு பொருத்தமாக உபயோகப்படுத்தியுள்ளார்கள். எம்பெருமானைப் பற்றித் தெரிவிக்கும் ப்ரமாண நூல்கள் எல்லாவற்றினுள்ளும் தமிழ்வேதமே சிறந்ததென்கிற கருத்தினால் அதனைத் திவ்யப்ரபந்தம் என்றார்கள். அந்த திவ்யப்ரபந்தங்களைப் பாடினவர்களான ப்ரமாதாக்களை திவ்யஸூரிகள் என்றார்கள். திவ்யஸூரிகள் பாடின திவ்யப்ரபந்தங்களின் ப்ரதாநப்ரமேயமான விஷ்ணுஸ்தலங்களையே திவ்யதேசம் என்றார்கள். இது எவ்வளவு திவ்யமான அமைப்பு.

### — ஆழ்வார்கள் பதின்மர் —

திவ்யஸூரிகளான ஆழ்வார்கள் பதின்மர். 1. பொய்கையாழ்வார். 2. பூதத்தாழ்வார். 3. பேயாழ்வார். (இம்மூவரையும் முதலாழ்வார்களென்று கூறுவது ஸம்பிரதாயம்) 4. திருமழிசையாழ்வார். 5. நம்மாழ்வார். 6. குலசேகராழ்வார். 7. பெரியாழ்வார். 8. தொண்டரடிப்பொடியாழ்வார். 9. திருப்பாணாழ்வார். 10. திருமங்கையாழ்வார்.

### — ஆழ்வார்கள் பன்னிருவருமாவர் —

நம்மாழ்வாருடைய சிஷ்யரான மதுரகவியாழ்வாரையும், பெரியாழ்வாருடைய திருமகளாரான சூடிக்கொடுத்த நாச்சியாரென்கிற ஆண்டாளையும் சேர்த்து "ஆழ்வார்கள் பன்னிருவர்" என்று வழங்குதலுமுண்டு. ஆண்டாள் ஸ்ரீமஹாலக்ஷ்மியின் அம்சமாகத் தோன்றியவளாதலால் பிராட்டியார் வகுப்பில் எண்ணப்பட்டவளாயிருந்தும், திவ்யப்ரபந்தமருளிச் செய்த காரணத்தினால் ஆழ்வார்கள் கோஷ்டியிலும் எண்ணத்தகுதியுடையாள். மதுரகவிகள் எம்பெருமான் விஷயத்தில் ஒன்றும்பாடாமல் நம்மாழ்வார் விஷயமாகவே பத்துப்பாசுரம் பாடியிருந்தாலும் இவருடைய பிரபந்தத்தையும் திவ்யப்ரபந்த ச்ரேணியிலே சேர்த்து இவரையும் திவ்யஸூரி கோஷ்டியிலே சேர்த்தார்கள் பூருவாசாரியர்கள்.

## — ஆழ்வார்களின் அவதார நாட்களும் அருளிச்செயல்களும் —

1. **பொய்கையாழ்வார்.** இவர் காஞ்சீபுரத்தில் திருவெஃகா என்கிற ஸ்ரீயதோக்தகாரிஸந்நிதியைச் சேர்ந்த பொய்கையில் ஐப்பசியில் திருவோணத்தில் அவதரித்து நூறு பாசுரங்கள் கொண்ட முதல்திருவந்தாதியை அருளிச் செய்தார்.

2. **பூதத்தாழ்வார்** திருக்கடன்மல்லையில் ஐப்பசியில் அவிட்டத்தில் அவதரித்து நூறு பாசுரங்கள் கொண்ட இரண்டாந் திருவந்தாதியை அருளிச் செய்தார்.

3. **பேயாழ்வார்** மயிலையில் ஐப்பசியில் சதயத்தில் அவ்தரித்து நூறு பாசுரங்கள் கொண்ட மூன்றாந்திருவந்தாதியை அருளிச் செய்தார். இம்மூவரும் திருக்கோவலூரில் சந்தித்தவர்கள்.

4. **திருமழிசையாழ்வார்** திருமழிசையில் தையில் மகத்தில் திருவவதரித்துத் தொண்ணூற்றாறு பாசுரங்கள் கொண்ட நான்முகன் திருவந்தாதியையும் நூற்றிருபது பாசுரங்கொண்ட திருச்சந்த விருத்தத்தையும் அருளிச் செய்தார். பக்தி ஸாரரென்பது இவர்க்குச் சிறப்புத் திருநாமம்.

5. **நம்மாழ்வார்** திருக்குருகூரில் வைகாசியில் விசாகத்தில் திருவவதரித்து திருவிருத்தம் பாசுரம் (100) திருவாசிரியம் (7) பெரிய திருவந்தாதி (87) திருவாய்மொழி (1102) ஆகிய நான்கு திவ்யப்ரபந்தங்களை அருளிச் செய்தார். குருகூர்ச்சடகோபனை இவரே ப்ரபந்நஜநகூடஸ்தர்.

6. **மதுரகவியாழ்வார்** ஆழ்வார்திருநகரிக்கு ஸமீபத்திலுள்ள திருக்கோளூரில் சித்திரைமீ சித்திரை நக்ஷத்திரத்தில் திருவவதரித்து "தேவு மற்றறியேன்" என்று நம்மாழ்வாரைத் தவிர வேறு தெய்வமறியாதவராய் ஆழ்வார்விஷயமாகப் பதினொரு பாசுரங்கொண்ட கண்ணிநுண் சிறுத்தாம்பை அருளிச்செய்தார். இவருடைய நிஷ்டையே மிகச் சிறந்தது.

7. **குலசேகராழ்வார்** திருவஞ்சிக்களத்தில் மாசிப்புனர்பூசத்தில் அவதரித்து நூற்றைந்து பாசுரங்கள் கொண்ட பெருமாள் திருமொழியை அருளிச்செய்தார்.

8. **பெரியாழ்வார்** ஸ்ரீ வில்லிபுத்தூரில் ஆனிஸ்வாதியில் அவதரித்துப் பன்னிரண்டு பாசுரங்கொண்ட திருப்பல்லாண்டையும் நானூற்றறுபத்தொரு பாசுரங்கொண்ட "பெரியாழ்வார் திருமொழி" என வழங்கும் பிரபந்தத்தையும் அருளிச்செய்தார்.

9. **ஆண்டாள்** ஸ்ரீ வில்லிபுத்தூரில் திருவாடிப்பூரத்தில் பெரியாழ்வார் திருமகளாய்த்தோன்றிச் **சூடிக்கொடுத்த நாச்சியார்** என்று திருநாமம் பெற்று முப்பது பாசுரங்கொண்ட திருப்பாவையையும் நூற்று நாற்பத்து மூன்று பாசுரங்கொண்ட நாச்சியார் திருமொழியையும் அருளிச்செய்தாள்.

10. **தொண்டரடிப்பொடியாழ்வார்** மண்டங்குடியில் மார்கழிக் கேட்டையில் திருவவதரித்து நாற்பத்தைந்து பாசுரங்கொண்ட திருமாலையையும் பத்து பாசுரங்கொண்ட திருப்பள்ளி யெழுச்சியையும் அருளிச்செய்தார்.

11. **திருப்பாணாழ்வார்** உறையூரில் கார்த்திகை ரோஹிணியில் திருவவதரித்து, பத்துப் பாசுரங்கொண்ட அமலனாதிபிரான் அருளிச்செய்து அழகிய மணவாளனுடைய திருமேனியில் அந்தர்த்தான மடைந்தனர். முநிவாஹநர் என்பதும் இவரையே.

12. **திருமங்கையாழ்வார்** திருவாலி திருநகரியைச்சார்ந்த திருக்குறையலூரில் கார்த்திகையில் கார்த்திகைநாளில் திருவவதரித்து, நம்மாழ்வார் அருளிய நான்கு வேத ஸாரமாகிய நான்கு திவ்யப்ரபந்தங்களுக்கு ஆறு அங்கம்போன்ற ஆறு திவ்யப்ரபந்தங்களை யருளிச்செய்தார்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (1) | பெரியதிருமொழி— | 1084. | (4) | சிறியதிருமடல். | ... 1. |
| (2) | திருக்குறுந்தாண்டகம். | 20. | (5) | பெரியதிருமடல். | .... 1. |
| (3) | திருவெழுகூற்றிருக்கை. | 1. | (6) | திருநெடுந்தாண்டகம். | ... 30. |

**— நாலாயிரமென்னும் எண்ணிக்கையைப்பற்றி —**

ஆழ்வார்களின் திவ்யப்பிரபந்தங்கள் நாலாயிரம் என வழங்கப்பட்டு வருவதானது "ஏற்றத்தாழ்வில்லாமல் நாலாயிரம் பாசுரங்கள் கொண்டது" என்கிற கருத்தினாலன்று. முதலாயிரம், பெரியதிருமொழியாயிரம், இயற்பா ஆயிரம், திருவாய்மொழியாயிரம் என நான்கு ஆயிரங்களாக வகுப்புண்டது பற்றியே நாலாயிரமென வழங்கிவருவது. ஆழ்வார்களெல்லாரும் ஒன்றுகூடி 'நாம் நாலாயிரம் பாட்டுகள் பாடக்கடவோம்' என்று ஸங்கேதம் செய்துகொண்டார்களில்லை. வெவ்வேறு கால விசேஷங்களில் அவர்களது திருவாக்கில் திருவவதரித்த பாட்டுக்களை ஸ்ரீமந்நாதமுனிகள் தம்மால் யோகதசையில் ஸாக்ஷாத்கரிக்கப்பட்ட நம்மாழ்வாரால் உபதேசிக்கப்பெற்று, வடமொழி வேதத்திற்கு வியாஸமுனிவர் பாகுபாடுகள் செய்தது போலத் தாமும் தமிழ்வேதமான விதனைப் பலவகைப் பொருத்தங்களை நோக்கிப் பௌர்வாபர்ய வ்யவஸ்தைகளும் ஆயிரமாயிரமான வ்யவஸ்தைகளும் செய்தருளினார். அந்த வ்யவஸ்தையின்படியே நான்கு ஆயிரங்களாகப் பிரியலுற்ற காரணம் பற்றியே நாலாயிரமென வழங்கிவரத் தொடங்கியது. பெரியதிருமொழியாயிரத்திலும் திருவாய்மொழி யாயிரத்திலும் ஆயிரத்திற்கு மிகவும் மேற்பட்ட பாட்டுக்கள் இருந்தாலும் ஆயிரமென்கிற வ்யபதேசத்திற்கு எப்படி அவத்யமொன்றுமில்லையோ, அப்படியே முதலாயிரத்திலும் இயற்பா ஆயிரத்திலும் ஆயிரத்திற்கு மிகவும் குறைந்த பாட்டுக்களிருப்பினும் ஆயிரமென்கிற வ்யபதேசத்திற்குக் குறையொன்றுமில்லை யென்பர் பெரியோர். நூறு ஆயிரம் முதலான பெரிய தொகைகளில் சிறிது ஏற்றத் தாழ்வு இருந்தாலும் அதைப் பொருள்படுத்தாமல் பெரிய தொகையையிட்டே வழங்குவது எங்குமுள்ளது.

**— திருமடல்களின் பிரிவைப் பற்றி —**

இத் தத்துவத்தை யுணராமல், நாலாயிரமென வழங்குதற்கேற்ப ஸரிஸமமாக நாலாயிரம் பாட்டுக்கள் இருந்து தீரவேணுமென்றுகொண்டு பிற்காலத்தவர்கள் திருமடல்களைப் பல பாட்டுக்களாக ஒடிப்பது சாஸ்த்ர விருத்தமும் ஸம்ப்ரதாய விருத்தமுமாகும். வேதாந்த வாசிரியர் பிரபந்த

சாரத்தில் (திருமடல்களை) ஒருவிதமாகப் பிரித்தாரென்றும், அப்பிள்ளையென்பவர் வாழிதிருநாமத்தில் மற்றொருவிதமாகப் பிரித்தாரென்றும் சொல்லுவது மெழுதுவதும் ஏற்கத் தக்கதன்றென்பதை நாம் பல நூல்களில் பரக்க நிரூபித்திருக்கிறோம். பிரபந்தசாரம் பின்புள்ளார் கற்பித்ததே யொழிய வேதாந்த குரு மொழிந்த தன்றென்பதைப் பேர்க்கவும் பேராத பிரமாணங்களினால் மூதலித்திருக்கிறோம்.

— மிகவும் ஸாரமான பேச்சு —

இங்கு ஸாரமாக வொன்றே தெரிவிப்போம். வேதாந்த வாசிரியர் பிரபந்தசார மென்றொரு நூலைச் செய்து அதில் திருமடல்களை இத்தனையித்தனை பாட்டுக்களென்று பிரித்துக் காட்டினது உண்மையாயிருந்தால் அது அவருடைய காலத்தில் ஸகலாசார்ய ஸம்மதமாகவே யிருந்திருக்கும். தாமாக வொரு புதிய அபிப்பிராயங்கொண்டு ஸ்வேச்சையாகப் பிரித்துக் காட்டியிருக்கவே மாட்டார். ஸ்ரீவைஷ்ணவாசார்ய ஸங்கேத வரம்பைக் கடப்பவரல்லரவர். ஆழ்வார்களின் அவதார ஸ்தலங்களிலும், அவதார நாட்களிலும், கர்த்ருநாம நிர்தேசம் அடியோடு இல்லாத திருவந்தாதிகள், திருச்சந்தவிருத்தம், அமலனாதிபிரான், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவெழுகூற்றிருக்கை, திருமடல்கள், இராமாநுச நூற்றந்தாதி ஆகிய இவற்றின் கர்த்ரு நாமங்களிலும், பரம்பரையாகவந்த பல ஐதிஹ்யங்களிலும், திவ்யப்ரபந்தார்த்த விசேஷங்களிலும் எப்படி அபிப்ராயபேதம் கொண்டிலரோ, அப்படியே திருமடல்களின் பாட்டுலக்க விஷயத்திலும் அபிப்ராயபேதம் கொண்டிருக்க அணுமாத்ரமும் அவகாசமிருந்திராது. ஆக, சிறிய திருமடல் நாற்பது பாட்டென்றும், பெரிய திருமடல் 78 பாட்டென்றும் அவர் காட்டியிருந்தது உண்மையாகில், பிற்பட்டவர்கள் யாரும் அதில் வைமத்யம் கொள்ள நேர்ந்திருக்கவே மாட்டாது. "தேசிகர் அப்படி கணக்கிட்டார்; அப்பிள்ளை இப்படி கணக்கிட்டார்" என்கிற வேற்றுமைப் பேச்சு விளைந்திருக்க ப்ரஸக்தியே கிடையாது. வேற்றுமை காணப்படுவது கொண்டே இவை கற்பனைகளத்தனை என்று கல்வெட்டுச் செய்யக் குறையில்லை. ஆக, திருவெழுகூற்றிருக்கைபோலவே திருமடல்களும் தனித்தனி ஒரேபாட்டென்று திண்ணமாக வெண்ணுக. இதில் யாருடைய எந்தப் பேச்சும் பயன்படாது.

— ஆழ்வார்களின் அவயவாவயவிபாவம் —

இவ்வாழ்வார்கள் யாவரும் நம்மாழ்வாருக்கு அவயவபூதர்களென்றும், நம்மாழ்வாரே ப்ரதானபூதரான அவயவியென்றும் ஸம்ப்ரதாயம். ஆசார்யகோஷ்டியில் சேர்ந்த உடையவரையும் நம்மாழ்வாருடைய அவயவங்களில் திருவடியாக நிர்வஹித்தார்கள். ஆனதுபற்றியே நம்மாழ்வாருடைய பாதுகைக்கு **இராமாநுசன்** என்றே திருநாமம். இவர் விஷயமாகத் திருவரங்கத்தமுதனார் அருளிச்செய்த இராமாநுச நூற்றந்தாதியும் திவ்யப்ரபந்தத் திரளிலே பரிகணிதமாயிற்று. இதை **ப்ரபந்நகாயத்ரீ** என்பர்கள். ஸ்ரீவைஷ்ணவர்கள் இதனை முகபடாம் செய்து நித்தியம் **அநுஸந்திப்பது விசேஷம்.**

## இனி ஆசாரியர்களைப்பற்றிப் பேசுவோம்.

**ஸ்ரீமந்நாதமுனிகள்.** காட்டுமன்னார் ஸந்நிதியில் ஆனிமீ° அனுஷத்தில் அவதரித்தவர். நம்மாழ்வாரை யோகதசையில் ஸாக்ஷாத்கரித்து திவ்யப்ரபந்தங்களை உபதேசம் பெற்றவர். ஆசார்யபரம்பரையில் நம்மாழ்வாருக்கு அடுத்த ஸ்தானத்திலுள்ளவர். இவர் சில க்ரந்தங்கள் அருளிச்செய்திருந்தும் இப்போது ஒன்றும் கிடைப்பதில்லை.

**உய்யக்கொண்டார்.** ஸ்ரீமந்நாதமுனிகளின் சிஷ்யர்களில் இவர் தலைவர். சித்திரைமாதத்துக் கார்த்திகையில் திருவவதரித்தவர். ஸ்ரீமந்நாதமுனிகள், தமது திருக்குமாரரான ஈச்வர முனிகளுக்கு ஒரு திருக்குமாரர் அவதரிப்பர் என்றறிந்து அவர்க்கு உபதேசிக்குமாறு ஸகலார்த்தங்களையும் இவரிடத்தில் உபதேசித்தருளியிருந்தார்; அதனை நிறைவேற்றுதற்கு முன்னமே இவர் திருநாட்டுக்கெழுந்தருளினார்.

**மணக்கால்நம்பி.** உய்யக்கொண்டாருடைய சிஷ்யர்களில் இவர் தலைவர். இவர் ஸ்வாசார்யரிடத்தில் ஸகலார்த்தங்களையும் பெற்று, ஆளவந்தாரை மிகவும் அநுவர்த்தித்து சிஷ்யராக்கிக்கொண்டு அவருக்கு உபதேசித்தருளினார். இவர் மாசியில் மகத்தில் திருவவதரித்தார்.

**ஆளவந்தார்.** இவர் ஸ்ரீ மந்நாதமுனிகளின் திருப்பேரனார். உடையவருடைய ஆசாரியர்களுக்கு ஆசாரியர். ஆடி உத்தராடத்தில் காட்டுமன்னார் ஸந்நிதியில் திருவவதரித்தவர். ஒப்புயர்வற்ற மஹாவித்வான். ஆகமப்ராமாண்யம், ஸித்தித்ரயம், கீதார்த்தஸங்க்ரஹம், ஸ்தோத்ரரத்நம், சதுச்ச்லோகி முதலிய க்ரந்தங்கள் அருளிச்செய்தவர். இவருடைய கடாக்ஷத்தினாலேயே உடையவர் ஸித்தாந்த ப்ரவர்த்தகரானார். யமுனைத்துறைவர், யாமுநாசார்யர் என்பதும் இவரையே.

**பெரியநம்பி.** ஆளவந்தாருடைய சிஷ்யர்களுள் தலைவர். உடையவருடைய ஸமாச்ரயணாசார்யர். இவரே ஆளவந்தாருடைய நியமனத்தினால் உடையவரை விஷயீகரித்து தர்சனப்ரவர்த்தகராக ஆக்கினார். வாக்யகுருபரம்பரையில் **பராங்குசதாஸர்** என்பது இவரையே. **மஹாபூர்ணர்** என்பதும் இவரையே. இவருடைய திருவம்சஸ்தர்கள் அநேக திவ்யதேசங்களில் ஸ்தலாசார்ய புருஷர்களாக விளங்கிவருகிறார்கள்.

**உடையவர்.** எம்பெருமானார், ஸ்ரீராமாநுஜர், ஸ்ரீபாஷ்யகாரர், யதீந்திரர் இத்யாதி திருநாமங்களினால் வழங்கப்பெற்ற ஜகதாசார்யர் இவரே. ஆதிசேஷனுடைய அபராவதாரம். ஸ்ரீபெரும்பூதூரில் சித்திரைத் திருவாதிரையில் அவதரித்தார். ஆளவந்தாருடைய சிஷ்யர்களான பெரியநம்பி, திருமலைநம்பி, திருக்கோட்டியூர் நம்பி, திருமாலையாண்டான் திருவரங்கப்பெருமாளரையர் என்னும் குரவர்கள் ஐவரை ஆசார்யர்களாகக் கொண்டவர். திருக்கச்சிநம்பிகளிடத்தில் மிக்க ப்ராவண்யமுடையவர். முதலியாண்டான், எம்பார், கூரத்தாழ்வான், அருளாளப்

பெருமாளெம்பெருமானர், அனந்தாழ்வான் முதலான பலபல மஹான் களுக்கு ஆசார்யர். இவருடைய ப்ரதான சிஷ்யர்கள் எழுபத்துநான்கு ஸிம்ஹாஸநாதிபதிக ளென்று சிறப்புப்பெற்று விளங்கி வருகிறார்கள். ஸ்ரீபாஷ்யம், வேதாந்ததீபம், வேதாந்தஸாரம், கீதாபாஷ்யம், வேதார்த்த ஸங்க்ரஹம், நித்யம், கத்யத்ரயம் என்னும் திவ்ய க்ரந்தங்களை அருளிச் செய்தவர்.

**உடையவருடைய சிஷ்ய பரம்பரை.** உடையவரிடமிருந்து சிஷ்யர் களின் பரம்பரை பலபல கிளைகளாகப் பெருகிவந்திருந்தாலும் ஸுப்ர ஸித்தமான பரம்பரை யொன்றை இங்கு விவரிப்போம்.

**எம்பார்.** மதுரமங்கலமெனவழங்கிவருகிற மழலைமங்கலத்தில் தைமீ புநர்வஸுவில் திருவவதரித்தவர். உடையவர்க்குச் சிறிய தாயார் குமாரர். **ராமாநுஜபதச்சாயா** என்பது இவர்க்குச் சிறப்பு. எம்பாரும் கூரத்தாழ்வானும் ஸமாநஸ்கந்தர்களான ஆசாரியர்கள்.

**பட்டர்.** ஸ்ரீபராசரபட்டரென்பதும் இவரையே. கூரத்தாழ்வானு டைய திருக்குமாரர். இவர் தமது திருத்தகப்பனாரிடத்திலும் எம்பாரிடத்தி லும் அர்த்த விசேஷங்கள் கேட்டவர். ஸ்ரீரங்கநாதனாலும் ஸ்ரீரங்கநாச்சி யாராலும் புத்ரஸ்வீகாரமாக வளர்த்துக் கொள்ளப்பட்டவர். ஸகல சாஸ்த்ரபாரங்கதர். திவ்யப்ரபந்தங்களில் வெகு அழகிய நிர்வாஹங்கள் அருளிச்செய்தவர். பகவத்குணதர்ப்பணமென்கிற ஸஹஸ்ரநாம பாஷ்யம் அஷ்டச்லோகீ, ஸ்ரீரங்கராஜஸ்தவம், ஸ்ரீ குணரத்நகோசம், க்ரியா தீப மென்னும் நித்யம், கைசிக வியாக்கியானம் முதலானவை இவரருளிச் செய்தவை. தமிழில் மஹாவித்வானுக புரஸித்தரான பிள்ளைப்பெரு மாளையங்கார் இவருடைய சிஷ்யர்.

**நஞ்சீயர்.** இவர் அத்வைத ஸம்பிரதாயத்திலிருந்து பட்டரால் திருத்திப்பணிகொள்ளப்பட்டவர். முன்னிலைமையில் **வேதாந்திகள்** என்றும் **மாதவாசார்யர்** என்றும் ப்ரஸித்தர். பட்டர் திருவடிகளில் ஆச்ரயித்த பின்பு உத்தமாச்ரமியாகி நஞ்சீயரென்று திருநாமம் பெற்றார். திரு வாய்மொழிக்கு ஒன்பதினாயிரப்படி உரையும் மற்றுஞ்சில திவ்யப்ரபந் தங்களுக்கு வியாக்கியானமும் ஸ்ரீஸூக்த பாஷ்யமும் அருளிச்செய்தார். [இப்போது சிலர் வெளியிட்டிருக்கும் ஸ்ரீஸூக்தபாஷ்யம் இவருடைய தன்று.] பங்குனியுத்தரத்தில் இவரவதாரம்.

**நம்பிள்ளை.** நஞ்சீயருடைய சிஷ்யர்களில் தலைவர். **வரதராஜாசார்யர்** என்பது இவருடைய நிஜநாமதேயம். பிறகு **லோகாசார்யர்** என்கிற சிறப் புப்பெயருண்டாயிற்று. இவருடைய ஸகலசாஸ்த்ர ப்ராவீண்யம் வாசாம கோசரம். திவ்யப்ரபந்தங்களிலும் ஸ்ரீராமாயணுதிகளிலும் விசேஷார்த் தங்களெல்லாம் இப்பேராசிரியர் முகமாகவே வெளியாயின. கார்த் திகையில் கார்த்திகைநாளில் திருவவதாரம்.

வடக்குத்திருவீதிப்பிள்ளை. நம்பிள்ளையின் சிஷ்யகோடிகளில் தலைவர். பெரியவாச்சான் பிள்ளையோடுகூடவே ஸகலார்த்தங்களும் கேட்டவர். திருவாய்மொழிக்கு ஈடு முப்பத்தாறாயிரப்படியென்கிற வியாக்கியானம் பட்டோலை கொண்டவர். திருநாமம்—ஸ்ரீ க்ருஷ்ணபாதர். வடக்குத் திருவீதிப்பிள்ளையும் பெரியவாச்சான்பிள்ளையும் ஸமான ஸ்கந்தர்களான ஆசார்யர்கள்.

பிள்ளைலோகாசார்யர். வடக்குத்திருவீதிப்பிள்ளையின் திருக்குமாரர். ஆசார்யஹ்ருதயம் முதலிய அத்யாச்சர்ய க்ரந்தங்களருளிச்செய்த அழகிய மணவாளப்பெருமாள் நாயனார்க்குத் திருத்தமையனார். (இருவரும் நைஷ்டிகப்ரஹ்மசாரிகள்.) இவர் பேரருளாளனுடைய அபராவதாரர். நம்பிள்ளையின் திருநாமமாகிய உலகாரிரியர் என்பதே இவர்க்குச் சாத்தப்பட்டது. இவருடைய திவ்யஸூக்திகள் அவதரிக்கவில்லையாகில் இவ்வுலகம் இருள் தருமாஞாலமே. பகவதவதாரம் போலவே இவரவதாரமும் போற்றத் தக்கது. ஐப்பசியில் திருவோணத்தில் கோயிலில் திருவவதாரம்.

திருவாய்மொழிப்பிள்ளை. பிள்ளைலோகாசார்யருடைய திருவடிகளில் தலைவர். வைகாசி விசாகத்தில் திருவவதரித்தவர்.

மணவாளமாமுனிகள். திருவாய்மொழிப்பிள்ளையின் திருவடிகளில் தலைவர். ஆழ்வார்திருநகரியில் ஐப்பசியில் திருமூலத்தில் எம்பெருமானுடைய அபராவதாரமாகத் தோன்றியவர். ஸகல சாஸ்த்ரங்களிலும் மிகத் தெளிவான ஞானம் பெற்றவர். இவருடைய திவ்யஸூக்திகளின் பெருமை ஒப்புயர்வற்றது. ஸ்ரீ ரங்கநாதனுக்கும் ஆசார்யராக அமைந்தவர். ஆசார்யரென்கிற வ்யபதேசம் இவர்தமக்கே முக்கியமாக இணங்குவதென்பது இவருடைய திவ்ய ஸ்ரீஸூக்திகளில் அவகாஹித்தவர்களுக்கு அறியவெளிதாம். பூர்வாசார்ய பரம்பரை இவரளவிலே விச்ராந்தம். அஷ்டதிக்கஜஸ்தாபகரிவர்.

ஸ்ரீ நிகமாந்த வாசிரியர். புரட்டாசித் திருவோணத்தில் திருவேங்கடமுடையானுடைய திருமணியின் அம்சமாகக் கச்சிப்பதியில் ஸ்ரீ தீபப்ரகாசன் ஸந்நிதியருகில் திருவவதரித்தவர். ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரர், கவிதார்க்கிகஸிம்ஹம், வேதாந்தாசார்யர் இத்யாதி பிருதாவளிகளைப் பெற்றவர். வடமொழியிலும் தென்மொழியிலும் பல க்ரந்தங்களையருளிச்செய்தவர். ஸ்ரீ வைஷ்ணவஸித்தாந்தத்திற்கு வயிரத்தூணனவர்.

இப்படிப்பட்ட ஆழ்வார்களும் ஆசாரியர்களும் திருவவதரித்ததனால் இந்நிலவுலகம் பெருமை பெற்றுளது. இவர்களது வைபவங்களை (அல்லது) திருநாமங்களை நாடோறும் சிந்தனைசெய்வதே சேமநிதியாகும். .... *

ஸ்ரீவைஷ்ணவ மஹாநிதியில்

முதல் பரிச்சேதம் முற்றிற்று.

# ஸ்ரீவைஷ்ணவ மஹாநிதி—இரண்டாவது பரிச்சேதம்

## — பூர்வாசாரியர்களின் மஹோபகாரகத்வ விவரணம் —

ஆசாரியர்கள் ஜீவித்திருக்கும் நாளில் தம்மை அடி பணிந்தவர்களுக்கு உஜ்ஜீவநோபாயமாக உபதேசங்களைச் செய்வது உபகாரமெனப்படும். பிற்காலத்தவர்களும் நெடுநாள் வாழும்படி நூல்களை இயற்றி வைப்பது மஹோபகார மெனப்படும். இத்தகைய மஹோபகாரம் செய்தருளின ஆசாரியர்களையும் அவர்களின் உபகார விசேஷங்களையும் ஈண்டு விவரிப்போம். முன்பரிச்சேதத்தில் சுருங்கச் சொன்னது இங்கு விசதமாக விவரிக்கப்படுகிறதென்க.

## — ஸ்ரீமந்நாதமுனிகள் —

இப்பேராசிரியர் ந்யாயதத்வம் என்றொரு மஹாக்ரந்தமருளிச் செய்திருந்ததாகத் தெரியவருகிறது. ஆனால் அது நெடுநாளைக்கு முன்னமே லுப்தமாய் விட்டதால் நம்போல்வார்க்கு அதை ஸேவிக்க பாக்யமில்லையாயிற்று. தேசிகன் பணித்த குருபரம்பராஸாரத்தில் “இவ்வாசார்யர்களில் ஈச்வரமுனிகள் பிள்ளை நாத முனிகள்; இவர் ந்யாயதத்வ மென்கிற சாஸ்த்ரமும் யோக ரஹஸ்யமுமருளிச் செய்தார்” என்றிருக்கையாலே யோகரஹஸ்யமென்றொரு க்ரந்தமுமருளிச் செய்திருந்ததாக அறியலாகிறது. ந்யாயதத்வமென்னும் மஹாக்ரந்தத்தின் மங்களச்லோகம் மாத்திரம் ரஹஸ்யத்ரயஸாரத்தில் தத்வத்ரயசிந்தநாதிகாரத்திலும் த்வயாதிகாரத்திலும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. அது வருமாறு—* யோ வேத்தி யுகபத் ஸர்வம் ப்ரத்யக்ஷேண ஸதா ஸ்வத:, தம் ப்ரணம்ய ஹரிம் சாஸ்த்ரம் ந்யாயதத்வம் ப்ரசக்ஷ்மஹே * என்று. இவ்விரண்டு க்ரந்தங்களும் நமக்கு துர்லபம்.

## — ஆளவந்தார் —

ஸ்ரீமந்நாதமுனிகளுக்குப் பிறகு உய்யக்கொண்டார் மணக்கால் நம்பி யென்னுமாசிரியர் இருவர் இருந்தார்கள். அவர்கள் பணித்த க்ரந்தமாக ஒன்றும் தெரியவரவில்லை; ஸ்ரீமந்நாதமுனிகளுக்குப் பின் ஆளவந்தாரே [ஸ்ரீயாமுநாசார்யர்] க்ரந்த மருளிச்செய்தவர். முன்னே ப்ரஸ்தாவித்த குருபரம்பராஸாரத்தில்—‘நாதமுனிகள் பிள்ளை ஈச்வர பட்டாழ்வான்; ஈச்வர பட்டாழ்வான் பிள்ளை ஆளவந்தார். இவரருளிச்செய்த ப்ரபந்தங்கள் ஆகமப்ராமாண்யமும் புருஷநிர்ணயமும், ஆத்மஸித்தி ஈச்வரஸித்தி ஸம்வித்ஸித்தியென்கிற ஸித்தித்ரயமும், ஸ்ரீகீதார்த்த ஸங்க்ரஹமும் ஸ்தோத்ரமும் சதுச்ச்லோகியும் ஆக எட்டு’’ என்றிருக்கையாலே மேலே குறித்த க்ரந்தங்களே ஆளவந்தாரருளிச்செய்தவையாம். இவற்றில் புருஷநிர்ணயமென்கிற க்ரந்தம் இப்போது துர்லபம். வெகு

காலத்திற்கு முன்னமே ஆப்தமென்கிறார்கள். ஆகமப்ராமாண்யமும்
ஸித்தித்ரயமும் கீதார்த்தஸங்க்ரஹமும் ஸ்தோத்ரரத்நமும் சதுச்ச்லோகி
யுமே இப்போது பிரசாரத்திலிருப்பவை. முந்தின இரண்டு திவ்யக்ரந்தங்
களுக்குப் பூருவர்களின் வியாக்கியானம் அவதரிக்கவில்லை. பிந்தின
மூன்று க்ரந்தங்களுக்கு உண்டு.

## — எம்பெருமானார் —

ஆளவந்தார் திருவடிகளில் ஆச்ரயித்து உய்ந்தவர்களில் திருக்கச்சி
நம்பிகள் தேவராஜாஷ்டகமருளிச் செய்தது தவிர, வேறு ஓராசார்யரும்
ஒரு க்ரந்தமும் அருளிச்செய்ததாகத் தெரியவில்லை. எம்பெருமானாருடைய
திவ்ய ஸ்ரீஸூக்திகளைப்பற்றியே இனி ப்ரஸ்தாவிக்க ப்ராப்தமாகிறது.
ஸ்வாமியின் திவ்யக்ரந்தங்கள் நவரத்னமோ! நவநீதமோ! என்னலாம்படி
ஒன்பதாக அமைந்திருக்கின்றன. கீதாபாஷ்யம், ஸ்ரீபாஷ்யம், வேதாந்த
தீபம், வேதாந்தஸாரம், வேதார்த்தஸங்க்ரஹம், சரணாகதிகத்யம், ஸ்ரீரங்க
கத்யம், ஸ்ரீவைகுண்டகத்யம், நித்யம்—என்பன. இவற்றுள் சரணாகதி
கத்யம் முதலிய மூன்று கத்யங்களை ஒன்றுசேர்த்து கத்யத்ரயமென்று
ஒரே க்ரந்தமாக வழங்குவர்களாயினும் அவை தனித்தனி க்ரந்தங்களே
யாம். குருபரம்பராஸாரத்தில் அப்படியே கணக்கிடப்பட்டிருப்பது காண
லாம். இந்த ஒன்பது க்ரந்தங்களுள் வேதாந்ததீபம் வேதாந்தஸாரம்
நித்யம் ஆகிய மூன்று க்ரந்தங்களுக்குத் தவிர மற்றவற்றுக்குப் பூருவர்
களின் வியாக்கியானங்கள் அவதரித்திருக்கின்றன. கீதாபாஷ்யத்திற்கு
தேசிகனருளிய தாத்பர்யசந்த்ரிகை, ஸ்ரீபாஷ்யத்திற்கு ச்ருதப்ரகாசிகை
யும் ச்ருதப்ரதீபிகையும். [ச்ருதப்ரதீபிகையென்பதும் ச்ருதப்ரகாசிகா
சார்யரே அருளிச்செய்த ஸங்க்ரஹவ்யாக்கியானம். இது சதுஸ்ஸூத்ரி
வரையிலுமே தெலுங்குலிபியில் நெடுநாளைக்குமுன் அச்சேறியிருக்கிறது.]
ஸ்ரீபாஷ்யத்திற்கு ச்ருதப்ரகாசிகைக்கும் முன்னே வியாக்கியானமவதரித்
திருந்ததாக ச்ருதப்ரகாசிகையினால் தெரியவருகிறது. ஜிஜ்ஞாஸாதி
கரணத்தில் "த்விசந்த்ரஜ்ஞாநாதாவபி அங்குல்யவஷ்டம்ப திமிராதிபி:"
இத்யாதி யருளிச்செய்துகொண்டுபோகையில் "அதவா கிமநேந பஹு
கோபபாதந ப்ரகாரேண" இத்யாதி வாக்யபாடம் உண்டா இல்லையா
என்பதை விமர்சியாநின்ற ச்ருதப்ரகாசிகாசார்யர் "அதவா கிமநேநேத்
யாதிபாடோ பஹுஷு கோசேஷு த்ருச்யதே" என்று ஸாதித்து
விட்டு உடனே "வ்யாக்க்யாத்ருபி: வ்யாக்க்யாதச்ச" என்று ஸாதித்
திருக்கிறார். இதனால் தமக்கு முன்னே ஸ்ரீபாஷ்யத்தை வியாக்கியானித்த
வர்கள் சிலருண்டென்று ஸ்பஷ்டமாகக் காட்டப்பட்டதாகிறது. ச்ருத
ப்ரகாசிகை அவதரித்தபிறகு அது மறைந்திருக்கக்கூடும். வேதார்த்த
ஸங்க்ரஹத்திற்கு ச்ருதப்ரகாசிகாசார்யரே தாத்பர்யதீபிகை யென்கிற
வியாக்கியானமருளிச் செய்திருப்பது ப்ரசாரத்திலுள்ளது. கத்யத்ரயத்
தில் சரணாகதிகத்யத்திற்கு மாத்திரம் ச்ருதப்ரகாசிகாசார்யருடைய
வியாக்கியானமுள்ளது. மூன்று கத்யங்களுக்கும் பெரியவாச்சான்

பிள்ளையின் மணிப்ரவாள வியாக்கியானமும் தேசிகனுடைய ஸம்ஸ்க்ருத வியாக்கியானமுமுள்ளன. மணிப்ரவாள வியாக்கியான மருளிச்செய்தவர் பெரியவாச்சான்பிள்ளையா ஆச்சான்பிள்ளையா என்பது நிஷ்கர்ஷிக்கப்படாத விஷயம். தேசிகனருளிச் செய்த பாஞ்சராத்ர ரக்ஷையில் மூன்றாமதிகாரம் மிக விபுலமானது; அதற்கு **நித்ய வ்யாக்யாநாதிகார** மென்று பெயரிடப்பட்டு நித்யத்திலநேக விஷயங்கள் சர்ச்சிக்கப் பட்டிருப்பதால் நித்யத்திற்கும் ஒருவாறு வியாக்கியானமுண்டென்று கொள்ளலாம்.

## — திருக்குருகைப்பிரான்பிள்ளான் —

இனி எம்பெருமானாருடைய திருவடிகளில் ஆச்ரயித்திருந்த ஸாக்ஷாச்சிஷ்யர்களருளிச் செய்த க்ரந்தங்களைப்பற்றிப் பேசுகிறோம். திருவாய்மொழிக்கு ஸங்க்ரஹமாக வொரு வியாக்கியான மிடும்படி ஸ்வாமி திருக்குருகைப் பிரான் பிள்ளானுக்கு நியமித்தருள அவர் ஆறாயிரப்படி யென்று ப்ரஸித்தமாயுள்ள வியாக்கியானத்தை யருளிச் செய்தார். ஸ்ரீவைஷ்ணவஸம்பிரதாயத்தில் முதன் முதலாகத் திருவவதரித்த மணிப்ரவாளக்ரந்தம் இதுவேயாகும்.

## — கூரத்தாழ்வான் —

கூரத்தாழ்வானருளிச் செய்த க்ரந்தங்களில் ஸ்ரீவைகுண்டஸ்தவம் அதிமாநுஷஸ்தவம் ஸுந்தரபாஹுஸ்தவம் வரதராஜஸ்தவம் ஸ்ரீஸ்தவம் ஆகிய பஞ்சஸ்தவமே யுள்ளது. **யமகரத்நாகரம்** என்கிற பெரிய க்ரந்தம் வியாக்கியானத்தோடுங்கூட (தெலுங்கு லிபியில்) அச்சிடப்பட்டிருக்கிறது: அது [மூலமும் வியாக்கியானமும்] கூரத்தாழ்வானருளியதாகச் சொல்லப்படுகிறது. கூரேச விஜயமும் கூரத்தாழ்வானருளிச் செய்ததாகச் சொல்லப்படுகிறது. அதில் "வித்யாரண்யோஜ்ஜிதத்வாத் நமக சமகயோ:" என்பது முதலான ச்லோகங்களிருப்பது கொண்டு அது கூரத்தாழ்வானுடைய க்ருதியன்றென்று பெரியோர்களால் முடிவு செய்யப்பட்டிருக்கிறது. வித்யாரண்யருடைய காலம் கூரத்தாழ்வானுடைய காலத்திற்கு மிகவும் பிற்பட்டதன்றே. நாடீ பஞ்சகம் கூரத்தாழ்வானருளிச் செய்ததென்று சிலர் சொல்லுவர்; ஆழ்வான் ஆண்டான் எம்பார் முதலான சில ஆசார்யர்களின் தனித்தனி ச்லோகங்கள் ஒன்று சேர்த்து அநுஸந்திக்கப்படுவதாகவே பெரியார்களின் முடிவு. ஆழ்வான் ரஹஸ்ய வயாக்க்யானமொன்று அருளிச் செய்திருந்ததாக தேசிகனுடைய ரஹஸ்யத்ரய ஸாரத்தில் சரம ச்லோகாதிகாரத்தில் "ஆழ்வானுடைய சரம ச்லோக வியாக்க்யானத்திலும் இவ்வளவே விவக்ஷிதமாகையால் ஒரு விரோதமுமில்லை" என்கிற வாக்யத்தினால் தெரிய வருகிறது. அப்படிப்பட்ட ஒரு க்ரந்தமும் இப்போது கிடைப்பதில்லை. அவ்விடத்திலேயே "பட்டரும் ஆழ்வானும் தாந்தாங்களருளிச் செய்த நித்யங்களிலே" என்கிற வாக்யமும் காண்கையாலே ஆழ்வான் நித்ய க்ரந்தமுமொன்று அருளியதாகத் தெரிகிறது. அதுவும் லுப்தம்.

## —எம்பார், ஆண்டான், அருளாளப்பெருமாள், அனந்தாழ்வான், கருடவாஹநர், ஸோமாசியாண்டான், வங்கிப்புரத்துநம்பி —

எம்பாரும் முதலியாண்டானும் முக்தகமாகச் சில பாசுரங்களும் ச்லோகங்களும் தவிர க்ரந்தரூபமாக எதுவும் அருளிச்செய்ததாகத் தெரியவில்லை. அருளாளப் பெருமாளெம்பெருமானார் ஞானஸாரம் ப்ரமேய ஸாரம் என்னு மிரண்டு பிரபந்தங்களருளிச் செய்துள்ளார். திருமலையனந்தாழ்வான் ஸ்ரீவேங்கடாசலேதிஹாஸமாலாவும் ராமாநுஜ சதுச் ச்லோகியு மருளிச் செய்துள்ளார். கருடவாஹந பண்டிதர் திவ்ய ஸூரிசரித மென்கிற மஹாகாவ்ய மியற்றியுள்ளார். ஸ்ரீராமமிச்ர ரென்னும் ஸோமாசியாண்டான் ஷடர்த்தஸம்க்ஷேபம் முதலான சில நூல்கள் பணித்திருப்பதாகத் தெரிகிறது. வங்கிப்புரத்து நம்பி நித்யக்ரந்த மொன்று பணித்துள்ளார்.

## — ஸ்ரீபராசரபட்டர் —

ஆழ்வானுடைய திருக்குமாரரான ஸ்ரீ பராசரபட்டர் ஸ்ரீரங்க ராஜஸ்தவம், ஸ்ரீரங்கநாத ஸ்தோத்ரம், ஸ்ரீகுணரத்நகோசம், அஷ்ட ச்லோகி, பகவத் குணதர்ப்பண மென்கிற ஸஹஸ்ரநாம பாஷ்யம், க்ரியா தீப மென்கிற நித்ய க்ரந்தம், லக்ஷ்மீ கல்யாண மென்கிற நாடகம் (லுப்தம்) கைசிக புராண வியாக்கியானம், நம்பெருமாள் திருமஞ்சன ச்லோகங்கள்—இவை யருளிச் செய்தார்.

## — கூரநாராயண ஜீயர் —

கூரத்தாழ்வான் திருவடிகளான கூரநாராயண ஜீயர் ஸுதர்சந சதகம் அருளிச் செய்தார். இவர் மந்த்ர சாஸ்த்ரங்களில் மஹாநிபுணராகையாலே மந்த்ர சாஸ்த்ர க்ரந்தங்களும் ஸ்தோத்ர க்ரந்தங்களும் பல அருளிச் செய்தாரென்று கேட்டதுண்டு. ஆனல் ஸுதர்சந சதக மொன்று தவிர வேறென்றும் கிடைத்திலது.

## — வேதாசார்யபட்டர் —

பட்டருடைய திருத்தம்பியாரான சீராமப் பிள்ளையின் திருக்குமாரரான வேதாசார்யபட்டர் க்ஷமாஷோடசியருளிச் செய்தார்.

## — நஞ்சீயர் —

பட்டர் திருவடிகளிலே ஆச்ரயித்த நஞ்சீயர் அருளிச்செய்த க்ரந்தங்களாவன—திருவாய்மொழிக்கு வியாக்கியானமான ஒன்பதினாயிரப் படி; [இந்த வியாக்கியானத்தைப் பற்றின இதிஹாஸத்தை குருபரம்பரா ப்ரபாவாதிகளிலே காண்க.] உபதேச ரத்தின மாலையில் *நஞ்சீயர் செய்த வியாக்கியைகள் நாலிரண்டுக்கு * என்ற பாசுரத்தின் வியாக்கியானத்திலே பிள்ளை லோகஞ் சீயர் " இவர்தாம் (நஞ்சீயர்) செய்தருளின

தாய்க் கண்டது திருப்பாவைக்கும் கண்ணிநுண் சிறுத்தாம்புக்குமிறே யுள்ளது; பின்னையு முண்டாகில் கண்டுகொள்வது'' என்றெழுதி யிருக்கக் காண்கிறோம். திவ்ய ப்ரபந்த வியாக்கியானங்கள் தவிர, நித்யம், ஸ்ரீஸூக்தபாஷ்யம் என்று சில க்ரந்தங்களும் நஞ்சீயரருளிச் செய்தனவாகச் சொல்லுகிறார்கள். அவை லுப்தம். இவரருளிச் செய்ததாக அச்சிடப்பட்டிருக்கிற ஸ்ரீஸூக்த பாஷ்யம் உண்மையில் இவருடையதன்று, அந்யதீயம்—என்பது ஸித்தாந்தம் செய்யப்பட்ட விஷயம்.

## — நம்பிள்ளை, வடக்குத்திருவீதிப் பிள்ளை —

இனி, நம்பிள்ளையருளிச் செய்த க்ரந்தங்கள் :- திருவாய்மொழி வியாக்கியானமான ஈடு முப்பத்தாறாயிரப்படி, திருவிருத்த வியாக்கியானமான ஈடு-இத்தியாதிகள் எனினும் இவை வடக்குத் திருவீதிப்பிள்ளையின் க்ருதிகளாகவே கொள்ளப்படுகின்றன; நம்பிள்ளை உபந்யாஸ ரூபமாக அருளிச் செய்தவைகளை இவர் ஏடுபடுத்தினரென்பது பற்றியாம் வடக்குத் திருவீதிப்பிள்ளை திவ்ய ப்ரபந்த வியாக்கியானமாகவல்லாமல் வேறுசில க்ரந்தங்களுமருளிச் செய்திருப்பதாகத் தெரியவருகிறது. குன்றத்தூரையன் குமாரரான அப்பன் ஸ்ரீநிவாஸாசார்யர் பணித்ததாக (1913-வஷத்தில்) தெலுங்குலிபியில் அச்சிடப் பட்டிருக்கின்ற அஷ்ட ச்லோகி பெரிய படி வியாக்கியானத்தில் (பக்கம் 14 லும் 64 லும்) வடக்குத் திருவீதிப் பிள்ளை அஷ்டாக்ஷர தீபிகையென்றொரு க்ரந்தம் அருளிச் செய்திருப்பதாகக் காட்டப்பட்டுள்ளது; ஸ்ரீவைஷ்ணவ ஸம்பிரதாயத்தில் வழங்கும் விசேஷார்த்தங்களுக்கெல்லாம் நம்பிள்ளையே ஆகரம். அதுவும் லுப்தம்.

## — பெரியவாச்சான் பிள்ளை —

இவரருளிச் செய்த க்ரந்தங்கள்:- நாலாயிர திவ்யப்ரபந்த வியாக்கியானங்கள். அதிலும் பெரியாழ்வார் திருமொழி வியாக்கியானம் நானூறு பாசுரங்களுக்கு லுப்தம். ஸ்தோத்ரரத்நத்திற்கு வியாக்கியானம், ஜிதந்தைக்கு வியாக்கியானம், நிகமனப்படியென்றொரு மிகச்சிறிய ரஹஸ்ய க்ரந்தம், மற்றுஞ் சிலவும் பெரியவாச்சான்பிள்ளை யருளிச் செய்தவை. இவருடைய திருக்குமாரர் ஆச்சான்பிள்ளை யென்று ப்ரஸித்தர். அவர் பரந்த ரஹஸ்யம், சதுச் ச்லோகீவியாக்கியானம், கத்யத்ரய வியாக்கியானம்; முக்தபோகாவளீ முதலான சில கிரந் தங்களருளிச் செய்துள்ளார். மணவாள மாமுனிகளின் திவ்ய ஸ்ரீஸூக்திகளில் 'ஆச்சான் பிள்ளை' என்று எடுத்துக்காட்டப்படுகிற வ்யக்தியைச் சிலர் பெரியவாச்சான் பிள்ளை யென்றே மயங்கி இவருடைய க்ரந்தங்களையும் அவரருளிச்செய்ததாக இயம்புவதுண்டு. விவாத க்ரஸ்த விஷயங்களைப்பற்றி இங்கு விரிவு வேண்டாவென விடுக்கிறோம்.

**எங்களாழ்வான்.** 'விஷ்ணு சித்தார்யர்' என்பது இவருடைய அபர நாமதேயம். 'தினவடங்கச் சொல்லுவர் திருவெள்ளறைச் சோழியர்' என்று ஸுப்ரஸித்தமான உலகவழக்கினால் இவருடைய ஜ்ஞானாதி

சயமறியத்தக்கது. ஸ்ரீவிஷ்ணுசித்தீயமென்று மிகவும் ப்ரஸித்தமான ஸ்ரீவிஷ்ணுபுராண வியாக்கியானம் இவரருளிச்செய்தது.

**நடாதூரம்மாள்.** எங்களாழ்வானுடைய திருவடிகளில் ஆச்ரயித்த அம்மாள் தத்வஸாரம், ப்ரபந்ந பாரிஜாதம், பரத்வாதி பஞ்சகம், ப்ராதரநுஸந்தேய ச்லோகமாலா—இவையருளிச் செய்தார். இவற்றுள், தத்வஸாரம்-ஸ்ரீபாஷ்யார்த்த விசேஷங்களை ஸங்க்ஹித்த ச்லோகரூபமான மிகச் சிறந்த க்ரந்தம். இது வியாக்கியானத்தோடுங்கூட முத்ரிதமானதே. ப்ரபந்ந பாரிஜாதமும் அநேக ப்ரமேய ஸங்க்ராஹகமாய் ச்லோகபத்தமான உத்தமக்ரந்தம்.

**ஸ்ரீஸுதர்சநபட்டர்.** இவர் நடாதூரம்மாள் திருவடிகளிலே யாச்ரயித்து தீபாதுத்பந்ந ப்ரதீபம் போலே மிக விளங்கினவர். ஸ்ரீபாஷ்யத்திற்கு மிக விரிவான வியாக்கியானமான ச்ருத ப்ரகாசிகையும், அதிஸங்க்ஷிப்த வியாக்கியானமான ச்ருத ப்ரதீபிகையும், வேதார்த்த ஸங்க்ரஹத்திற்கு வியாக்கியானமாக தாத்பர்ய தீபிகையும், சரணாகதி கத்யத்திற்கு ஸம்க்ஷிப்தமான பாஷ்யமும், ஸுபாலோபநிஷத்பாஷ்யமும் அருளிச்செய்திருக்கிறார்.

**கிடாம்பியப்புள்ளார்.** இவர்க்கு வாதிஹம்ஸாம்புதாசார்யரென்று ஸம்ஸ்க்ருத நாமதேயம். இவர் வேதாந்ததேசிகனுக்கு மாதுலரும் ஆசார்யருமாவர். இவர் ந்யாயகுலிச மென்றொரு க்ரந்தமருளிச் செய்திருப்பதாகக் கேள்வி.

**வேதாந்தவாசிரியர்.** ஸ்ரீவைஷ்ணவ ஸம்பிரதாயத்தில் அதிக ஸங்க்யையான க்ரந்தங்களருளிச் செய்தவர் இவ்வாசிரிய ரொருவரேயாவர் ஸ்தோத்ர விபாகத்தில் முப்பத்திரண்டு ஸ்துதிகள்; ரஹஸ்ய ப்ரஸ்தாநத்தில் முப்பத்திரண்டு ரஹஸ்யங்கள். காவ்யநாடக விபாகத்தில், ஸங்கல்ப ஸூர்யோதய நாடகம், யாதவாப்யுதய காவியம், ஹம்ஸ ஸந்தேசம், ஸுபாஷிதநீவீ; வ்யாக்க்யானவகுப்பில், ஈசாவாஸ்யோபநிஷத்பாஷ்யம், ஸ்தோத்ர பாஷ்யம், சதுச்ச்லோகீபாஷ்யம், கத்யத்ரயபாஷ்யம், கீதார்த்த ஸங்கிரஹ ரக்ஷை, கீதாபாஷ்ய தாத்பர்ய சந்த்ரிகை; தத்வடீகை; ஸ்வதந்த்ர க்ரந்தமாக சததூஷணீ, தத்வ முக்தாகலாபம் [அதற்கு வியாக்கியானமாக] ஸர்வார்த்த ஸித்தி, ந்யாயஸித்தாஞ்ஜநம், ந்யாயபரிசுத்தி, ஸேச்வர மீமாம்ஸை, மீமாம்ஸாபாதுகா, ஸச்சரித்ரரக்ஷா, ஸ்ரீ பாஞ்சராத்ரரக்ஷா, நிக்ஷேபரக்ஷா. யஜ்ஞோபவீத ப்ரதிஷ்டா, வைச்வதேவ காரிகா, வியாக்கியானத்தோடு கூடிய பூகோள நிர்ணயம். ஆக இவ்வளவு க்ரந்தங்கள் இவரருளிச் செய்தவை. இவற்றை யெல்லாம் 'வேதாந்த தேசிக க்ரந்தமாலா' என்கிற தொகுதியில் நாம் அச்சிட்டு வெளியிட்டிருக்கிறோம். அதன் விலை 40 ரூ. தத்வமுக்தாகலாபம் மறுபதிப்பாகவேணும்.

**நயனவரதாசார்யர்.** இவர் தேசிகனுடைய திருக்குமாரர். அதிகரண ஸாராவளிக்கு வியாக்கியானம், சில தேசிகரஹஸ்யங்களுக்கு ஸம்ஸ்க்ரு

தாநுவாதம், சில தேசிகஸ்தோத்ரங்களுக்கு ஸம்க்ஷிப்தமான வியாக்கியானம் இவரருளிச் செய்ததாகச் சொல்லுகிறார்கள். இதில் விப்ரதிபத்தி கொள்வாருமுளர். ஆகவே இவருடையக்ருதிகளைப்பற்றி நிர்ணயமாகச் சொல்லுவதற்கில்லை.

## — நடுவில் திருவீதிப் பிள்ளை பட்டர் —

இவரும் பெரியவாச்சான் பிள்ளை வடக்குத் திருவீதிப்பிள்ளைகள் போல நம்பிள்ளை திருவடிகளை யாச்ரயித்து உய்ந்தவர். இவர் திருவாய்மொழிக்கு நம்பிள்ளையின் மிகவிரிவான உபந்யாஸத்தைப் பட்டோலை கொண்டிருந்து ஒரு பெரிய க்ரந்தமாக இட்டிருந்தாரென்றும், அதன் ப்ரசாரத்தை நம்பிள்ளை அநுமதித்தருளாமல் கரையானுக்கு இரையாக்கினரென்றும் சொல்லுவர்கள். இந்த பட்டர் தத்வத்ரய விஷயமாக வொரு விரிவான க்ரந்தமருளிச் செய்திருப்பதாகத் தெரிகிறது. மணவாள மாமுனிகளருளிச் செய்த தத்வத்ரய வியாக்கியானத்தில் அந்த க்ரந்தத்திலிருந்து விரிவான வாக்கியங்கள் அடிக்கடி மேற்கோளாக எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றன. அந்த க்ரந்தம் கிடைப்பதில்லை, லுப்தம்.

## — பின்பழகிய பெருமாள் ஜீயர் —

இவர் நம்பிள்ளை திருவடிகளில் ஆச்ரயித்தவ ரென்பது தவிர, நம்பிள்ளையிடத்தில் அத்விதீயமான பக்தி கொண்டிருந்தவரென்பது உபதேசரத்தின மாலையினால் விளங்குகின்றது. ஆறாயிரப்படி குருபரம்பராப்ரபாவம் இவருடைய க்ரந்தமாகக் காண்கிறது.

## — பிள்ளைலோகாசார்யர் —

இவரருளிச் செய்த க்ரந்தங்கள் அஷ்டாதசரஹஸ்யம். அவை யாவன: 1, ஸ்ரீவசந பூஷணம் 2, தத்வத்ரயம். 3, அர்த்தபஞ்சகம். 4, அர்ச்சிராதி. 5. ப்ரமேய சேகரம் 6. ப்ரபந்ந பரித்ராணம். 7. ஸாரஸங்க்ரஹம். 8. ஸம்ஸார ஸாம்ராஜ்யம். 9. நவரத்நமாலை. 10. நவவித ஸம்பந்தம். 11. யாத்ருச்சிகப்படி. 12. பரந்தபடி. 13. ச்ரிய:பதிப்படி. 14. தத்வசேகரம். 15. தனித்வயம். 16 தனிசரமம். 17. தனிப்ரணவம். 18. முமுக்ஷுப்படி. இந்த ரஹஸ்ய க்ரந்தங்கள் தவிர வேறு சில க்ரந்தங்களும் அருளிச் செய்திருந்ததாகத் தெரியவருகிறது. கத்யத்ரயத்திற்கு ஒரு விக்கியானமருளிச் செய்திருந்ததாக மணவாள மாமுனிகளெடுத்துக் காட்டியுள்ளார். தத்வத்ரயத்தில் ஈச்வரப்ரகரணத்தில் (6) "ஜ்ஞானானந்தைக ஸ்வரூபனாகையாவது-ஆநந்தரூபஜ்ஞானனாயிருக்கை" என்றவிடத்து(மண) வியாக்யானத்தில்-"அநுகூல ஜ்ஞானமேஸ்வரூபமாயிருக்கஜ்ஞானானந்தங்களென்று பிரித்துச் சொல்லுகிறது இரண்டு முண்டாகைக்காக. என்றிறே இவர்தா மிட்டருளின கத்ய வ்யாக்கியானத்திலே அருளிச்செய்தது" என்கிற ஸ்ரீஸூக்தி காணப்படுகிறது. அந்த வியாக்கியானம் இப்போது எங்கும் கிடைப்பதில்லை. லுப்தமென்றே சொல்லவேணும். அழகிய

மணவாளன் விஷயமாக இருபது ச்லோகங்கள் கொண்ட ரங்கேச விம்சதி யென்றொரு ஸ்தோத்ரம் இவரருளிச் செய்ததாகச் சொல்லப்படுகிறது. இது வெகுகாலத்திற்கு முன்பு ஒரு ஸ்தோத்ரத் தொகுதியில் சேர்த்து அச்சிடப்பட்டு மிருக்கிறது. ஆனால் பிரசாரத்தில் இல்லை.

## — அழகியமணவாளப்பெருமாள் நாயனார் —

இவர் வடக்குத் திருவீதிப்பிள்ளையின் இளைய திருக் குமாரர். பிள்ளை லோகாசார்யருடைய திருத்தம்பியார். இவரருளிச் செய்த க்ரந்தங்கள்-ஆசார்ய ஹ்ருதயம். பட்டோலை. அருளிச்செயல்ரஹஸ்யம். திருப்பாவைக்கு ஆறாயிரப்படி வியாக்கியானம். கண்ணிநுண் சிறுத் தாம்பு வியாக்கியானம். அமலனாதிபிரான் வியாக்கியானம் முதலியன. பெரிய திருமடல் வியாக்கியானமுமொன்று இவரருளிச் செய்ததாகச் சொல்லுவர்கள். இவர், பதகமல ஸஹஸ்ரமென்று ஒரு வடமொழி க்ரந்த மருளிச் செய்யத் தொடங்கி மூந்நூறு ச்லோகங்களோடு நின்று விட்ட தாகச் சிலர் கூறுமைதிஹ்யம் அர்வாசீந கல்பிதம். அப்படியொரு க்ரந்த மும் கிடையாது; இவர் அருளிச் செய்யத் தொடங்கினதுமில்லை.

## — வாதிகேஸரி அழகிய மணவாளச் சீயர் —

இவர் நாயனாராச்சான்பிள்ளையின் திருவடிகள். இவர், திருவாய் மொழிக்குப் பன்னீராயிரப்படியும், திருவிருத்தத்திற்கு ஸ்வாபதேச வுரையும், திருப்பாவைக்கு ஒரு ஸங்க்ரஹ வியாக்கியானமு மிட்டிருக்கிறார். தத்வதீபம், தீபப்ரகாசம், தத்வ நிரூபணம், ரஹஸ்யத்ரய காரிகாவலீ, தீபஸங்க்ரஹம் முதலான க்ரந்தங்களு மருளிச் செய்துள்ளார்.

## — ஜநந்யாசார்யர் —

திருநாராயணபுரம் ஆய் என்று ப்ரஸித்தரான இவர் ஸ்ரீவசந பூஷணத்திற்கும் ஆசார்ய ஹ்ருதயத்திற்கும் வியாக்கியான மிட்டிருக் கிறார். இவருடைய ஆசார்ய ஹ்ருதய வியாக்கியானம் முதலிரண்டு ப்ரகரணங்களுக்கே கிடைத்திருக்கிறது. இது அந்யதீய மென்பாருமுளர்.

## — திருவாய்மொழிப்பிள்ளை —

இவர் பெரியாழ்வார் திருமொழிக்கு ஸ்வாபதேசவுரையென்று ஒரு வியாக்கியான மிட்டிருப்பதாக அச்சிடப்பட்டு மிருக்கிறது. இது இவருடைய ஸந்ததியில் தோன்றின பின்புள்ளார் பணித்ததே யொழிய, பிள்ளை லோகாசார்யருடைய திருவடிகளும் மணவாள மாமுனிகளுக்கு ஆசார்யருமான திருவாய்மொழிப் பிள்ளை பணித்ததன்று என்று பெரி யார் பகரக் கேட்டிருக்கை. இந்த வியாக்கியானம் இவர் அருளிச் செய்த தாயிருந்தால் இதைப்பற்றி மணவாள மாமுனிகள் உபதேசரத்தின மாலையில் அருளிச்செய்யாது விடுதற்குக் காரண மில்லையென்பது அநேக ஹேதுக்களில் தலையான ஹேது. இவரருளிச் செய்த க்ரந்தமாக ஏதுவும் கிடைத்திலது.

## — மணவாளமாமுனிகள் —



பூர்வாசார்ய பரம்பரையானது மாமுனிகளளவிலே முற்றுப்புள்ளியிடப்பெற்றிருக்கின்றது. இவரருளிச் செய்த திவ்ய ஸூக்திகளினாலேயே பூர்வாசார்ய ஸ்ரீஸூக்திகளுக் கெல்லாம் பெருமையுண்டாயிற்றென்பது எள்ளளவும் அதிசயோக்தியன்று. ஏற்கெனவே அவதரித்துள்ள பூர்வாசார்ய திவ்ய ஸூக்திகளை ப்ரவசனம் செய்தருள்வதிலேயே மிகுந்த அபிநிவேச முடையரான மாமுனிகள் ஸ்வதந்த்ரமாகச் சில க்ரந்தங்கள் இட்டருளத் திருவுள்ள முடையவரல்லரேயானாலும், இவ்வுலகின் பாக்யபரிபாக மடியாக சிஷ்யர்களின் பிரார்த்தனைக் கிணங்கியும் பகவந் நியமனத்தை முன்னிட்டும் * தேனேபாலேகன்னலே யமுதேயான பலதிவ்யக்ரந்தங்களையும் அருளிச்செய்தருளும்படியாயிற்று. அவற்றின் விவரணம் வருமாறு: பிள்ளை லோகாசார்யரருளிச் செய்த ரஹஸ்யங்களில் ஸ்ரீ வசநபூஷணம் தத்வத்ரயம் முமுக்ஷுப்படி என்கிற மூன்றுரஹஸ்யக்ரந்தங்கள் மிகச் சிறந்தவைகளும் ப்ரதானங்களுமாகையாலே அம்மூன்றுக்கும் வியாக்கியானமிட்டருளினார். பிள்ளை லோகாசார்யருடைய திருத்தம்பியாரான அழகிய மணவாளப் பெருமாள்நாயனார் அருளிச்செய்த ஆசார்ய ஹ்ருதயமென்னும் ரஹஸ்ய ரத்னத்திற்கு வியாக்கியான மிட்டருளினார். பெரியவாச்சான் பிள்ளை நாலாயிரத்திற்கும் பூர்த்தியாக வியாக்கியானமருளிச் செய்திருந்தும் அதில் பெரியாழ்வார் திருமொழி முதற்பாசுரம் தொடங்கி "வாக்குத்தூய்மை யிலாமையினாலே மாதவாவுன்னை" (5-1-1) என்கிறவளவும் வியாக்கியானம் கரையானுக்கு இரையாகி துர்லபமாய் விட்டபடியாலே அவ்வளவுக்குத் தாம் வியாக்கியானமிட்டருளினார். இராமானுசநூற்றந்தாதிக்கு உரையிட்டருளினார். அருளாளப் பெருமாளெம்பெருமானாரருளிச் செய்த ஞானசாரப் பிரமேய சாரங்களுக்கு ஸம்வாதப்ரமாணங்களைச் சேர்த்தருளினார். கீதைக்குத் தாத்பர்யதீபமென்றொரு வியாக்கியானம் இட்டருளினார். ஈடு முப்பத்தாறாயிரப் படிக்கும் தாமருளிச்செய்த ரஹஸ்ய வ்யாக்கியானங்களுக்கும் பிரமாணத் திரட்டுகள் ஸங்க்ரஹித்தருளினார். திருவாராதந ப்ரயோகமொன்று திருவாய் மலர்ந்தருளினார். உபதேச ரத்தினமாலை, திருவாய்மொழி நூற்றந்தாதி, ஆர்த்தி என மூன்று தமிழ்ப் பிரபந்தங்களருளிச் செய்தார். தேவராஜமங்களமும் யதிராஜ விம்சதியு மருளிச்செய்தார். மற்றும் ஸ்ரீஸூக்தி விசேஷங்களுண்டாகில் கண்டுகொள்வது.

## — மாமுனிகளின் ஸ்ரீஸூக்திப் பெருமை —

உலகில் ஸ்ரீஸூக்திகளருளிச் செய்தவர்கள் பல ஆசார்யர்களுமுண்டு. எனினும், மணவாளமாமுனிகளின் திவ்ய ஸ்ரீஸூக்திகளின் மாதுர்யமும் காம்பீர்யமும் அர்த்த புஷ்டியும் ரஸபுஷ்டியும் அஸாதாரணமாகவே யிருக்கும். *நாமூலம் லிக்க்யதே கிஞ்சித் நாநபேக்ஷிதமுச்யதே * என்னும்படி யமைந்த வியாக்கியானம் மாமுனிகளுடையதேயாம். வேறு எந்த ஆசிரியரும் இங்ஙனே வியாக்கியானம் அமைக்கக் கற்றிலர் என்றால் இது அதிசயோக்தியேயாகாது. பல மதாந்தரங்களைக் கண்டித்து எழுதினாலுங்கூட ஒருவருடைய மனமும் நோகாதபடிக்கும் வ்யர்த்ததூஷண பரிஹாஸங்களைச் சிறிதும் புகவிடாதபடிக்கும், எந்த இடத்தை யெடுத்தாலும் சாஸ்த்ரார்த்தமே கைகொள் கனியாம்படிக்கும் 'ஸகலசாஸ்த்ரஸாகர பாரங்கதர் இவரொருவரே' என்று திண்ணமாக எண்ணும்படிக்கும், அநந்வயம் க்லிஷ்டாந்வயம், மயங்கவைத்தல் முதலிய தோஷங்களுக்குச் சிறிதும் இடமில்லாதபடிக்கும் ஸ்ரீஸூக்திகளருளிச் செய்தவர் மாமுனிகளொருவரே. ஸூத்ரம் போன்ற பிள்ளை லோகாசார்ய திவ்ய ஸூக்திகளுக்கு அவதாரிகையிடுகிற அழகும் மூலத்திற்கு அர்த்த மருளிச்செய்கிற வைகரியும், ஆங்காங்கு அர்த்தங்களைப் பிண்டீகரித்து நிகமித்தருளுகிற அற்புதமும் * உள்ளுந்தோறு மென்னெஞ்சு எரிவாய் மெழுகொக்கும். வஸ்துத: இவ்வாசிரியருடைய ஸ்ரீஸூக்திகளை ஸேவித்த பின்பு இன்னொரு வாக்கில் வாயை வைத்தால் * ஸ்திதே ரவிந்தே மகரந்தநிர்ப்பரே மதுவ்ரதோ நேக்ஷுரகம் ஹி வீக்ஷதே * என்ற ஆளவந்தார் ஸ்ரீஸூக்திக்கு விருத்தமாகச் செய்கிறோமென்கிற எண்ணமுண்டாகிறதேயன்றி வேறில்லை. பூருவர்களின் க்ரந்தோபகார விஷயத்தில் யதாமதி எழுதினோமிது; பிரசாரத்திலில்லாத சில க்ரந்தங்களுமுண்டு; அவற்றுக்கு இன்னார் கர்த்தா என்பதில் நிர்ணயமில்லாமையாலே அவற்றை விடுத்தோம்.

ஸ்ரீவைஷ்ணவமஹாநிதியில் இரண்டாவது பரிச்சேதம் முற்றிற்று.

---

# ஸ்ரீவைஷ்ணவமஹாநிதி—மூன்றாவதுபரிச்சேதம்.

## நூற்றெட்டுத் திருப்பதிகளின் அகராதியும் அத்திருப்பதிகளின் விசேஷங்களும்.

முக்கியமான குறிப்பு :—திவ்யதேசத்தின் பெயர் ஒவ்வொன்றோடும் 'திரு' என்று சேர்த்துக் கொள்ள வேண்டும், அகராதி முறைக்காக நாம் திருவைவிட்டு எழுதினாலும் பக்தர்கள் அநுசந்திக்கும் போது திருவைச் சேர்த்தே அநுசந்திப்பது.

அட்டபுயகரம். [அஷ்டபுஜத்தெம்பெருமான் ஸன்னிதி.] ஸ்ரீகாஞ்சீ யதோக்தகாரி ஸன்னிதியின் அருகிலேயேயுள்ள தலமிது. *செம்பொனி

லங்கு வலங்கை வாளி திண்சிலை தண்டொடு சங்கமொள்வாள், உம்பரிரு சுடராழியோடு கேடக மொண்மலர்பற்றி* என்கிற திருமங்கையாழ்வார் பாசுரப்படியே எட்டுத் திருவாயுதங்களைக்கொண்ட எட்டு புஜங்களையுடைய எம்பெருமானுடைய ஸேவை அற்புதமானது. *தொட்ட படை யெட்டுந் தோலாத வென்றியான் அட்டபுயகரத்தான்* என்று பேயாழ்வாரும், ஒரு பதிகத்தினால் திருமங்கையாழ்வாரும் மங்களாசாஸனம் செய்தருளின தலம். (காஞ்சீபுரம் ஸ்டேஷன்).

**அத்தியூர்.** இதுவே தேவப்பெருமாள் ஸன்னிதியென்றும் வரதராஜப்பெருமாள் ஸன்னிதியென்றும் வழங்குவது. 'கோயில் திருமலை பெருமாள் கோயில்' என்று சிறப்பித்துக்கூறும் திவ்ய தேசங்கள் மூன்றனுள் இஃது ஒன்று. ஹஸ்திகிரி யென்ற சொல்லுக்குத் தக்கபடி இங்கு மலையொன்றும் காணாவிடினும் இருபத்துநான்கு படிகளேறி ஸேவிக்கவேண்டிய உயர்ந்த நிலத்தில் பெருமாள் எழுந்தருளியுள்ளார். சிறிய குன்று வடிவமாகவே அந்த ஸ்தானமுள்ளது. கீழே அழகிய சிங்கரும் மேலே தேவப்பெருமாளும் ஸேவை ஸாதிப்பர். *உலகேத்து மாழியான் அத்தியூரான்* என்றும், *அத்தியூரான் புள்ளையூர்வான்* என்றும் பூதத்தாழ்வாரும் *வரந்தருமாமணி வண்ணனிடம் மணிமாடங்கள் சூழ்ந்தழகாயகச்சி* என்று திருமங்கையாழ்வாரும், நம்மாழ்வார் திருவிருத்தத்தின் தொடக்கத்தில் *இமையோர் தலைவா!* என்றும், திருவாய்மொழியின் தொடக்கத்தில் *அயர்வறுமமரர்களதிபதி* என்றும் குறித்தது தேவப்பெருமாளையே யென்பது ஸம்ப்ரதாயம். நான்முகக் கடவுள் அச்வமேதயாகஞ் செய்து ஸாக்ஷாத்கரித்ததலம் அர்க்கோணம் செங்கற்பட்டு லயனில் காஞ்சீபுரம் ஸ்டேஷன்.

**அயிந்திரபுரம்.** எம்பெருமான்—அடியவர்க்கு மெய்யன், தாஸஸத்யன். திருமங்கையாழ்வார் ஒரு பதிகம் பாடியுள்ளார். (வில்லுபுரம்—தஞ்சாவூர்ப்பாதையில் திருப்பாப்புலியூர் Cuddalore N. T. ஸ்டேஷன்.)

**அயோத்தி.** பெரியாழ்வார், குலசேகராழ்வார் துணுக்கைப் பாடல். பைஜாபாத் பக்கத்தில் அயோத்யா ஸ்டேஷன்.

**அரங்கம்.** உலகமறிந்த புகழ்படைத்த இத்தலத்தைப்பற்றி என்ன எழுதுவது. ஆழ்வார்கள் பதின்மரும் ஆண்டாளும் மங்களாசாஸனஞ் செய்த தலம். ஸகல ஆசாரியர்களும் படுகாடுகிடந்த ஸ்தலம். திருச்சியருகில் ஸ்ரீரங்கம் ஸ்டேஷன்.

**அரிமேய விண்ணகரம்.** திருநாங்கூர்—பதினொரு திருப்பதிகளுள் ஒன்று. திருமங்கையாழ்வார் ஒரு பதிகம் பாடல். சீர்காழி ஸ்டேஷன்.

**அல்லிக்கேணி.** ஸ்ரீ பார்த்தஸாரதிப் பெருமாள் ஸன்னிதியும் தெள்ளிய சிங்கப்பெருமாள் [நரஸிம்ஹஸ்வாமி] ஸன்னிதியும் ஸேவிக்கத்

தக்கவை. பேயாழ்வார் திருமழிசையாழ்வார் திருமங்கையாழ்வார் ஆகிய ஆழ்வார்கள் மூவரால் மங்களாசாஸனம் செய்யப்பெற்ற தலம் இது. வானமாமலை மடம், அஹோபிலமடம் முதலிய மடங்களும் சாலைகளும் உள்ளன. மதராஸ் மாநகரத்தில் ஒரு பகுதியாகவுள்ள ஊர்— திருவல்லிக்கேணியென்பது; ஸெண்ட்ரல் ஸ்டேஷனிலிருந்து தெற்கே இரண்டு மைல் தூரத்திலும், எழும்பூர் ஸ்டேஷனிலிருந்து தென்கிழக்கே இரண்டு மைல் தூரத்திலுமுள்ளது. *மன்னு தண்பொழிலும் வாவியும் மதிளும் மாடமாளிகையும் மண்டபமும்* என்று திருமங்கையாழ்வார் அருளிச்செய்தபடி மிக அழகு பொலிந்த தலமிது.

**அழுந்தூர்.** ஆமருவியப்பன். திருமங்கையாழ்வார் நான்கு பதிகம் பாடியுள்ளார். (பாசுரங்களில் அழுந்தூர் என்று மாத்திரமுள்ளது) தேரழுந்தூரென வழங்குவர். மாயவரம் ஜங்ஷனுக்கடுத்த குத்தாலம் ஸ்டேஷனிலிருந்து 3 மைல். தேரழுந்தூரென்கிற புது ஸ்டேஷனுமுண்டு.

**அன்பில்.** திருமழிசையாழ்வார் துணுக்கைப்பாடல் மங்களாசாஸனம். (லால்குடி ஸ்டேஷனிலிருந்து 5 மைல். அப்பக்குடத்தான் ஸன்னிதி யென்கிற திருப்பேர் நகரையும் இதையும் ஒருங்கே ஸேவிக்கலாம்.)

**அனந்தபுரம்.** இது அனந்தசயன மென்றும் வழங்கப் பெறும். நம்மாழ்வாரொருவர் பாடல், ஒரு பதிகம். திருவேந்திரம் ஸ்டேஷன்.

**ஆதனூர்.** திருமங்கையாழ்வார் துணுக்கைப் பாடல். கும்பகோணத்திலிருந்து சுவாமிமலைவழியாய் 5 மைல் பஸ் மார்க்கம்.

**ஆய்ப்பாடி** (கோகுலம்) பெரியாழ்வார், ஆண்டாள் துணுக்கைப்பாடல்.

**ஆலிநகரி.** திருவாலியும் திருநகரியும் ஒரே திருப்பதியாகக் கணக்கு. திருமங்கையாழ்வார் 3 பதிகம். குலசேகராழ்வார் துணுக்கை. (சீர்காழி)

**ஆறன்விளை.** மலையாளர் 'ஆரம்முளை' என வழங்குவர். நம்மாழ்வார் பதிகம் பாடல். ஏரணுகுலத்திலிருந்து புதிய ரைல் பாதை.

**இடவெந்தை.** திருமங்கையாழ்வார் பதிகம் பாடல். வண்டலூர் ஸ்டேஷனிலிருந்து பஸ்மார்க்கம். திருக்கடன்மல்லையிலிருந்து படகு.

**இந்தளூர்.** திருமங்கையாழ்வார்பதிகம் பாடல். (மாயவரம் ஸ்டேஷன்.)

**உத்தமர் கோயில்.** கரம்பனூரென்று திருமங்கையாழ்வார் துணுக்கை.

**உறையூர்.** கோழியென்கிற பெயரால் திருமங்கையாழ்வாருடைய துணுக்கைப் பாடல். (திருச்சிக் கோட்டை ஸ்டேஷன்.)

**ஊரகம்.** [உலகளந்த பெருமாள் ஸன்னிதி] இங்கு த்ரிவிக்ரமனுடைய ஸேவை மிக அற்புதமானது. இவ்வளவு திருவளர்த்தியான திருமேனி மற்றெந்த திவ்ய தேசத்திலுமில்லை. இப்பெருமான் இங்கு உரகரூபியாகவும் ஸேவை ஸாதிப்பதனால் இத்தலத்திற்கு ஊரகமென்று திருநாமமாயிற்று. (உரகம்—ஸர்ப்பம்.) இவர் மிக வரப்ரஸாதி. "ஊரகத்

தான் திருமஞ்சன ப்ரார்த்தனை" என்பது உலகப்ரஸித்தம். இந்த ஸன்னிதியிலேயே பிரதக்ஷிணத்தில், நீரகம். காரகம், கார்வானம் என்றகோயில்களுமுள்ளன. இவை திருமங்கையாழ்வாருடைய துணுக்கைப் பாடல்.

**எவ்வுளூர்.** திருமங்கையாழ்வார் பதிகம்பாடல். (திருவள்ளூர்.)

**கடிகை.** பேயாழ்வார், திருமங்கை யாழ்வார் துணுக்கைப் பாடல். சோளஸிம்ஹபுரமென வழங்கும். (ஷோலிங்கர் ஸ்டேஷன்.)

**கடித்தானம்.** மலைநாட்டுத் திருப்பதி. நம்மாழ்வார் பதிகம் பாடல். எரணாகுலத்திலிருந்து புதிய ரைல் பாதை.

**கண்டமென்னுங்கடிநகர்.** பதரிகாச்ரம மார்க்கத்தில் தேவப்ரயாகையென்கிறதலம். பெரியாழ்வார் பதிகம் பாடினர்.

**கண்டியூர்.** திருமங்கை யாழ்வார் துண்டுப் பாடல். தஞ்சாவூர் ஸ்டேஷனிலிருந்து திருவையாறு வழியில் 6 மைல்.

**கண்ணங்குடி.** திருமங்கை யாழ்வார் பதிகம்பாடல். (திருவாரூர் ஜங்க்ஷனிலிருந்து கீவளூர் ஸ்டேஷன்.)

**கண்ணபுரம்.** சௌரிராஜப்பெருமாள். நம்மாழ்வார் குலசேகராழ்வார், பெரியாழ்வார் ஆண்டாள் திருமங்கை யாழ்வார் ஆகிய ஐவருடைய மங்களாசாஸனம். நம்மாழ்வாரும் குலசேகராழ்வாரும் ஒவ்வொரு பதிகம்; பெரியாழ்வாரும் ஆண்டாளும் துண்டுப்பாசுரம். திருமங்கை யாழ்வார் 100 பாசுரம். (பெரிய திருமொழியில் எட்டாம்பத்து பூர்த்தியாக.) நன்னிலம் ஸ்டேஷனிலிருந்து 4 மைல்.

**கண்ணமங்கை.** பத்தராவிப்பெருமாள். திருமங்கை யாழ்வார் பதிகம் பாடல். (திருவாரூர் ஸ்டேஷனிலிருந்து 4 மைல்.)

**கவித்தலம்.** (கபிஸ்தலம்.) திருமழிசை யாழ்வார் "ஆற்றங்கரை கிடக்குங் கண்ணன்" என்று துணுக்கை பாடினர், கும்பகோணம் தஞ்சாவூரிடையில் பாபநாசம் ஸ்டேஷன்.

**கள்வர்.** திருமங்கை யாழ்வாருடைய துணுக்கைப் பாடல் (காஞ்சீபுரியில் தேவதாந்தராலயத்திலுள்ளவர்.)

**காட்கரை.** (மலைநாடு) நம்மாழ்வார் ஒரு பதிகம் பாடல். ஷோரனூர் எரணாகுலம் பாதையிலுள்ள இடைப்பள்ளி ஸ்டேஷன்.

**காரகம்.** ஊரகம் காண்க.

**கார்வானம்.** ஊரகம் காண்க.

**காவளம்பாடி.** திருமங்கை யாழ்வார் பதிகம் பாடல். திருநாங்கூர்த் திருப்பதிகள் 11-ல் ஒன்று. (சீர்காழி.)

**குடந்தை.** ஆராவமுதன். இதுவே கும்பகோண க்ஷேத்ரமென்பது. சார்ங்கபாணிப் பெருமாள் ஸன்னிதியும் சக்ரபாணிப்பெருமாள் ஸன்னிதியுமுள்ளன. பூதத்தாழ்வார் பேயாழ்வார் திருமழிசையாழ்வார்

நம்மாழ்வார் பெரியாழ்வார் ஆண்டாள் திருமங்கையாழ்வார் இவர்களுடைய மங்களாசாஸனம். நம்மாழ்வார் மாத்திரம் ஒரு பதிகம் பாடியுள்ளார். (கும்பகோணம் ஸ்டேஷன்.)

குருகூர். இதுவே ஆழ்வார் திருநகரி என்பது. பொலிந்து நின்ற பிரான் ஸன்னிதி. நம்மாழ்வார் மணவாளமா முனிகள் திருவவதார ஸ்தலம். நம்மாழ்வாருடைய மங்களாசாஸனம். ஒருபதிகம் பாடியுள்ளார். ஆழ்வார் திருநகரி ஸ்டேஷன். திருநெல்வேலியிலிருந்து பஸ் மார்க்கமும்.

**குளந்தை.** ஆழ்வார் திருநகரி நவதிருப்பதிகளுள் ஒன்ற்ன பெருங்குள மென்பதிது. நம்மாழ்வாருடைய துண்டுப்பாடல்.

**குறுங்குடி.** திருமழிசையாழ்வார் நம்மாழ்வார் பெரியாழ்வார் திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம். நம்மாழ்வார் ஒரு பதிகமும், திருமங்கையாழ்வார் இரண்டு பதிகமும் பாடியுள்ளார்கள். (வானமாமலையிலிருந்து 8 மைல் தூரத்திலுள்ளது. சேர்மாதேவிஸ்டேஷனிலிருந்தும்செல்லலாம்.

கூடல். தென்மதுரையின் திருநாமமிது. திருமங்கையாழ்வார் துண்டுப்பாடல். (மதுரை ஸ்டேஷன்.)

**கோட்டியூர்.** ஸௌம்யநாராயணப் பெருமாள். திருக்கோட்டியூர் நம்பிகளின் திருவவதார ஸ்தலம். பூதத்தாழ்வார் பேயாழ்வார் திருமழிசையாழ்வார் பெரியாழ்வார் திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம். பெரியாழ்வாரும் திருமங்கையாழ்வாரும் பதிகம் பாடியுள்ளார்கள். (மானமதுரை, சிவகங்கை, காரைக்குடி, கல்லல் முதலிய பல விடங்களிலிருந்து செல்லலாம். பஸ் மார்க்கம்,)

**கோவர்த்தனம்.** வடமதுரைப்ராந்தத்திலுள்ளது. பெரியாழ்வார் ஒரு பதிகம். ஆண்டாள் துணுக்கைப் பாடல்.

**கோவலூர்.** பொய்கையார் பூதத்தார் பேயார் என்கிற முதலாழ்வார்கள் மூவரும் ஒன்று சேர்ந்து உய்ந்த அற்புதமான மிகப் பெரிய திவ்யதேசம். பொய்கையார் பூதத்தார் திருமங்கையாழ்வார்களுடைய மங்களாசாஸனம். திருமங்கையாழ்வார் ஒரு பதிகம் பாடியுள்ளார். (வில்லுபுரம்—காட்பாடி இடையிலுள்ள திருக்கோயிலூர் ஸ்டேஷன்.)

**கோழி.** உறையூர் காண்க.

**கோளூர்.** வைத்தமாநிதிப் பெருமாள். மதுர கவிகளின் திருவவ்தார ஸ்தலம். நம்மாழ்வாருடைய மங்களாசாஸனம் ஒரு பதிகம். ஆழ்வார் திருநகரிஸமீபம்.

**சாளக்கிராமம்.** ஸ்ரீஸாலக்ராம க்ஷேத்திரம். நேபால நாட்டிலுள்ளது. பெரியாழ்வார் துணுக்கைப்பாடல், திருமங்கையாழ்வார் பதிகம்.

**சிங்கவேள்குன்றம்.** இது மிகச் சிறந்த ந்ருஸிம்ஹ க்ஷேத்ரம். திருமங்கையாழ்வாரால் பத்துப் பாசுரங்களினால் மங்களா சாஸனம் செய்யப் பெற்ற தலமிது. [பெரிய திருமொழி 1—7. * அங்கண் ஞால

மஞ்ச* என்கிற பதிகம் காண்க.] இத்தலத்தைப் பாடிய அவ்வாழ்வார் "தெய்வமல்லால் செல்லவொண்ணுச் சிங்கவேழ் குன்றமே" என்ற தனல் இங்குச் சென்று ஸேவிப்பது மனிதர்களுக்கு மிக அருமை யென்பது தெரியவரும். உண்மையில் மிகவும் சிரமப்பட்டே ஸேவிக்க வேண்டிய ஸ்தலமிது. இக்காலத்தில் சிறிது ஸௌகரியமுண்டு என்று சொல்லலாம். "மதராஸ் பாம்பே" ரைல் பாதையில் கடப்பை (Cuddapah) ஸ்டேஷனிலிறங்கி (ஆள்ளகெட்ட) வழியாக மோடார் பஸ்ஸிலும் பிறகு மாட்டு வண்டியிலும் சென்று சேரலாம்.

**சித்திரகூடம்.** திருமங்கையாழ்வார் இரண்டு பதிகம், குலசேகராழ்வார் ஒரு பதிகம் பாடினர். (சிதம்பரம்.)

**சிரீவரமங்கை.** வானமாமலை என்பது இதுவே. நான்குநேரியென வழங்குவர். தெய்வநாயகப் பெருமாள், தோதாத்ரிநாதன். நம்மாழ்வார் மங்களாசாஸனம் ஒருபதிகம். திருநெல்வேலியிலிருந்து பஸ் 20 மைல்.

**சிறுபுலியூர்.** திருமங்கையாழ்வார் பதிகம் பாடல். மாயவரம், பேரளம், கொல்லுமாங்குடி, மங்கநல்லூர் இந்த 4 ஸ்டேஷன்களில் எதிலிருந்தும் போகலாம்.

**சிற்ருறு.** திருச்செங்குன்றூர்த்திருச்சிற்ருறென்பதிது. நம்மாழ்வார் ஒரு பதிகம் பாடல். ஏரணுகுலத்திலிருந்து புதிய ரைல் பாதை.

**சீராமவிண்ணகரம்.** திருமங்கையாழ்வார் பதிகம் பாடல் (சீர்காழி.)

**செம்பொன்செய்கோயில்.** திருமங்கையாழ்வார் பதிகம் பாடல். திருநாங்கூர்த்திருப்பதிகள் 11-ல் ஒன்று. (சீர்காழி ஸ்டேஷன்).

**சேறை,** ஸாரநாதப் பெருமாள். திருமங்கை யாழ்வார் பதிகம் பாடியுள்ளார். கும்பகோணத்திலிருந்து பஸ்மார்க்கம் 9 மைல்.

**தஞ்சை.** (தனித்தனியாக 3 ஸன்னிதிகள் உள்ளன.) பூதத்தாழ்வார் திருமங்கையாழ்வார் துணுக்கைமங்களாசாஸனம்.(தஞ்சாவூர் ஸ்டேஷன்.)

**தண்கா.** (தீபப்ரகாசன் ஸன்னிதி, விளக்கொளி யெம்பெருமான் ஸன்னிதி.] இத்தலத்தெம்பெருமான் பிராசீனகாலத்தில் சயனத்திருக் கோலமாய் ஸேவை ஸாதித்ததாகச் சில சான்றுகளால் தெரியவந்தாலும் இப்போது நின்ற திருக்கோலமே. திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம். திருவிருத்தத்தில் * நானிலம் வாய்க்கொண்டு * என்ற பாசுரத்தில் 'விண்ணேர் தொழுங்கண்ணன் வெஃகாவுது அம்பூந்தேனிளஞ் சோலையப்பாலது" என்றுள்ளதைக்கொண்டு நம்மாழ்வாருடைய மங்களாசாஸனமும் இத்தலத்திற்குண்டென்பர் ஒரு சாரார். (தண்கா என்பதும் தேனிளஞ் சோலையென்பதும் பரியாயம்.) ஸ்ரீமத் வேதாந்த தேசிகருடைய திருவவதார ஸ்தலமிது.

**தண்கால்.** திருத்தாங்கலெனத் தவறாக வழங்குவர். பூதத்தாழ்வார் திருமங்கையாழ்வார் துணுக்கைப்பாடல். சிவகாசி ஸ்டேஷனிலிருந்து 2 மைல். ஸ்ரீவில்லிபுத்தூர் ஸமீபம்.

**தலைச்சங்க நாண்மதியம்.** (தலைச்சங்காடு) பூதத்தாழ்வாரும் திரு மங்கை யாழ்வாரும் மங்களாசாஸனம். வயல்காட்டிலுள்ள ஏகாந்தமான சிறுகோயில். (மாயவரம் தரங்கம்பாடி லயனில் ஆக்கூர் ஸ்டேஷன்.)

**துலைவில்லிமங்கலம்.** ஆழ்வார்திருநகரி நவதிருப்பதிகளில் சேர்ந்தது. இங்கே தேவபிரான் ஸன்னிதியும் அரவிந்த லோசனன் ஸன்னிதியுமாக இரண்டு ஸன்னிதிகள் இருப்பதால் இரட்டைத்திருப்பதி யென்றே இத் தலம் வழங்கும். நம்மாழ்வார் பதிகம்.

**துவரை.** த்வாரகை. கோமதீத்வாரகை யென்றுப்ரஸித்தம். பாம்பே அஹமடாபாட், ராஜகோட், ஜாம்நகர் வழியாய்ச் சென்று சேர்வது. பெரியாழ்வாருமாண்டாளும் துணுக்கைப் பாடல்.

**தெற்றியம்பலம்.** திருநாங்கூர்த் திருப்பதிகள் பதினொன்றில் ஒன்று; திருமங்கை யாழ்வார் பதிகம் பாடல். (சீர்காழி ஸ்டேஷன்.)

**தென்மதுரை.** திருக்கூடலென்பது. திருமங்கை யாழ்வார் துணுக்கை.

**தேவனார்தொகை.** திருநாங்கூர்த் திருப்பதிகள் பதினொன்றி லொன்று; திருமங்கை யாழ்வார் பதிகம் பாடல். (சீர்காழி ஸ்டேஷன்.)

**நந்திபுரவிண்ணகரம்.** இது நாதன்கோயில் என்றே ப்ரஸித்தமாக வழங்கும். திருமங்கையாழ்வார் ஒரு பதிகம் பாடியுள்ளார். (கும்ப கோணத்திலிருந்து தெற்கே 3 மைல் உள்ளது.)

**நறையூர்.** இது நாச்சியார்கோயிலென்றே பிரஸித்தமாக வழங்கும். திருமங்கையாழ்வார் நூறு பாசுரம் பாடியுள்ளார். (கும்பகோணத்தி லிருந்து 6 மைல். பஸ்மார்க்கம்.)

**நாகை.** (நாகப்பட்டணம்) ஸௌந்தர்யராஜப்பெருமாள் ஸேவை மிக அற்புதம். திருமங்கையாழ்வார் ஒரு பதிகம் பாடியுள்ளார். (நாகப் பட்டணம் ஸ்டேஷன்.)

**நாவாய்** நம்மாழ்வார் பதிகம் பாடல். திருமங்கையாழ்வார் துணுக்கை. கள்ளிக்கோட்டை லயனில் எடகோலம் ஸ்டேஷனிலிருந்து ஒரு மைல்.

**நின்றவூர்.** திருமங்கையாழ்வார் துணுக்கைப் பாடல். அரக்கோணம் சென்னை யிடையில் தின்னனூர் ஸ்டேஷன்.

**நீர்மலை.** இத்தலத்தில் ஸ்ரீரங்கநாதன் முதலிய பல எம்பெருமான் கள் ஸேவை ஸாதித்தாலும், 'நீர்வண்ணன்' என்கிற எம்பெருமானே தலைமை பெற்றவர். இத்தலத்தை மங்களாசாஸனம் செய்தருளிய திருமங்கையாழ்வார் "இரும்பொழில் சூழ் நன்றுய புனல் நறையூர் திருவாலி குடந்தை தடந்திகழ் கோவல்நகர், நின்றானிருந்தான் கிடந்தான்

நடந்தாற்கிடம் மாமலையாவது நீர்மலையே" என்றருளிச் செய்திருப்பதைப் பற்றிக்கொண்டு, நின்றான் இருந்தான் கிடந்தான் நடந்தான் என்கிற எம்பெருமான்களெல்லாரும் இங்கே ஸேவை ஸாதிக்கவேணுமென்று ஆவல்கொண்ட பக்தர்கள் பிற்காலத்தில் சில எம்பெருமான்களை இங்கு எழுந்தருளப்பண்ணினதாகப் பெரியோர் கூறுவர். ஆழ்வாருடைய மங்களாசாஸனத்திற்கு முன்னமே யெழுந்தருளியிருந்தவர்களெனினுமாம்.

**நீரகம்.** ஊரகம் காண்க.

**நைமிசாரணியம்.** திருமங்கையாழ்வார் ஒரு பதிகம் பாடின வடநாட்டுத் தலம். லக்னவ், பாலாமுஜங். வழி.

**பரமேச்சுர விண்ணகரம்.** காஞ்சீபுரம் வைகுண்டபெருமாள் ஸன்னிதி. திருமங்கையாழ்வார் பதிகம் பாடல்.

**பவளவண்ணம்.** காஞ்சீபுரியில். திருமங்கையாழ்வார் துண்டுப்பாடல்.

**பாடகம்.** காஞ்சீபுரம், பாண்டவதூதன் ஸன்னிதி. பூதத்தாழ்வார் பேயாழ்வார் திருமழிசையாழ்வார், திருமங்கையாழ்வார் துண்டுப்பாடல்கள்.

**பார்த்தன்பள்ளி.** திருநாங்கூர்த்திருப்பதிகள் 11ல் ஒன்று. திருமங்கையாழ்வார் பதிகம் பாடல். (சீர்காழி ஸ்டேஷன்.)

**பிரிதி.** பதரிகாச்ரம மார்க்கத்தில் ஜோஸிமட். திருமங்கையாழ்வார் ஒரு பதிகம். (இங்கிருந்து பதரிகாச்ரமம் 18 மைல்.)

**புட்குழி.** திருமங்கையாழ்வார் துணுக்கைப்பாடல். காஞ்சீபுரத்திலிருந்து 8 மைல். (பஸ் மார்க்கம்.)

**புல்லாணி.** திருமங்கையாழ்வாருடைய மங்களாசாஸனம். இரண்டு பதிகம் பாடியுள்ளார். திருவணையாத்திரையில் ஸேவிக்க வேண்டிய திவ்யதேசம். (ராமநாதபுரத்திலிருந்து 6 மைல்.)

**புலியூர்.** குட்டநாட்டுத் திருப்புலியூரென்பதிது. (மலைநாடு) நம்மாழ்வார் பதிகம் பாடல். திருமங்கையாழ்வார் துணுக்கைப் பாடல். எரணகுலத்திலிருந்து புதிய ரைல் பாதை.

**புள்ளம்பூதங்குடி.** திருமங்கையாழ்வார் பதிகம் பாடல். கும்பகோணத்திலிருந்து சுவாமிமலைவழி.

**புளிங்குடி.** ஆழ்வார் திருநகரி நவதிருப்பதிகளுள் ஒன்று. நம்மாழ்வார் பதிகம் பாடல்.

**பேரெயில்.** இதுவே தென்திருப்பேரையென வழங்கப்படுவது. நம்மாழ்வார்பதிகம் பாடினர். ஆழ்வார் திருநகரி நவதிருப்பதிகளிலொன்று.

**பேர்நகர்.** அப்பக்குடத்தான் ஸன்னிதி யென்றும் கோயிலடி யென்றும் வழங்கும். திருமழிசையாழ்வார் நம்மாழ்வார் பெரியாழ்வார் திருமங்கையாழ்வார் பாடல். நம்மாழ்வாரும் திருமங்கையாழ்வாரும் பதிகம்

பாடியுள்ளார்கள். (லால்குடி ஸ்டேஷனிலிருந்தும் ஸ்ரீரங்கத்திலிருந்தும் செல்லலாம்.)

**மணிக்கூடம்.** திருநாங்கூர்த்திருப்பதிகள் பதினொன்றில் ஒன்று. திருமங்கையாழ்வார் பதிகம் பாடல். (சீர்காழி ஸ்டேஷன்.)

**மணிமாடக்கோயில்.** திருநாங்கூர்த்திருப்பதிகள் பதினொன்றில் ஒன்று, திருமங்கையாழ்வார் பதிகம் பாடல். (சீர்காழிஸ்டேஷன்.)

**மாலிருஞ்சோலை.** இது அழகர் கோயில் என்றும், கள்ளழகர் ஸன்னிதி யென்றும் வழங்கும். பூதத்தாழ்வார் பேயாழ்வார் நம்மாழ்வார் பெரியாழ்வார் ஆண்டாள் திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம். பல பதிகங்கள் பாடியுள்ளார்கள். (மதுரையிலிருந்து 12 மைல்)

**மூழிக்களம்.** நம்மாழ்வாரும் திருமங்கையாழ்வாரும் மங்களாசாஸனம். நம்மாழ்வார் ஒரு பதிகம். (எரணாகுளம் ஷோரனூர் லயனிலுள்ள அங்கமாலி ஸ்டேஷனிலிருந்து 7 மைல் போகவேணும்.) வண்டிமார்க்கம்.

**மெய்யம்.** திருமங்கையாழ்வார் துண்டுப் பாடல், திருச்சி மானா மதுரை லயனில் திருமயம் ஸ்டேஷன்.

**மோகூர்.** நம்மாழ்வார் ஒரு பதிகம்; திருமங்கையாழ்வார் துண்டுப் பாடல். மதுரையிலிருந்து 7 மைல்.

**வடமதுரை.** நம்மாழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள் பாடிய தலம். மதராஸ்—டெல்லி வழியிலுள்ளது.

**வண்பரிசாரம்.** திருப்பதிசாரமென வழங்குவர். நம்மாழ்வாரின் திருத்தாயாரான உடையநங்கையார் அவதரித்த தலம் இதுவே. நம்மாழ்வாருடைய மங்களாசாஸனம். (நாகர்கோவில் ஸமீபம் பஸ் மார்க்கம்.)

**வண்புருடோத்தமம்.** திருநாங்கூர்த் திருப்பதிகள் பதினொன்றில் ஒன்று. திருமங்கையாழ்வார் பதிகம் பாடல். (சீர்காழி).

**வண்வண்டூர்.** மலைநாட்டுத் திருப்பதி. நம்மாழ்வார் பாடல் ஒரு பதிகம். எரணாகுளத்திலிருந்து புதிய ரைல்பாதை.

**வதரியாச்சிரமம்.** ஸ்ரீபதரிகாச்ரமம். பெரியாழ்வார் துணுக்கைப் பாடல். திருமங்கையாழ்வார் இரண்டு பதிகங்கள். (ஹரித்வாரம் வழி).

**வரகுணமங்கை.** ஆழ்வார் திருநகரி நவதிருப்பதிகளுள் நத்தம் என வழங்கப்படுவது; நம்மாழ்வாருடைய துணுக்கைப் பாடல்.

**வல்லவாழ்.** மலையாளர் திருவல்லாய் என வழங்குவர். நம்மாழ்வாரும் திருமங்கையாழ்வாரும் ஒவ்வொரு பதிகம் பாடல். எரணாகுலத்திலிருந்து புதிய ரைல்பாதை.


**வானமாமலை.** (சிரீவரமங்கை காண்க). பக்கம் 23.

**வாட்டாறு.** மலைநாட்டுத் திருப்பதி. நம்மாழ்வார்பாடல் ஒரு பதிகம். (திருவனந்தபுரம் பஸ்மார்க்கம்.)

**விண்ணகர்.** இதுவே உப்பிலியப்பன் ஸன்னிதியென்பது. நம்மாழ்வார் ஒரு பதிகமும், திருமங்கையாழ்வார் மூன்று பதிகமும் பாடியுள்ளார். (திருநாகேச்வரம் ஸ்டேஷனிலிருந்து ஒரு மைல்: அல்லது கும்பகோணத்திலிருந்து 4 மைல் சென்று ஸேவிக்கலாம்.)

**வித்துவக்கோடு.** மலையாளர் திருமிற்றக்கோடு என வழங்குவர். குலசேகராழ்வார் மங்களாசாஸனம் ஒரு பதிகம். (ஷோரனூர் ஸமீபத்திலுள்ள பட்டாம்பி ஸ்டேஷனிலிருந்து 2 மைல்.) கால்நடை.

**விருந்தாவனம்.** ஆண்டாள் பதிகம். (வடமதுரையிலிருந்து 6 மைல்.



ஸ்ரீமத் பரமஹம்ஸ. திருமலை, திருப்பதி
பெரியஜீயர் ஸ்வாமி சின்னஜீயர் ஸ்வாமிகள்.

**வில்லிபுத்தூர்.** வடபெருங்கோயிலுடையான் ஸன்னிதி மிக அற்புதமானது. பெரியாழ்வார் ஆண்டாள் திருவவதார ஸ்தலம். விருதுநகர் தென்காசி லயனில் ஸ்ரீவில்லிபுத்தூர் ஸ்டேஷன்.)

**வெஃகா.** [ஸ்ரீயதோக்தகாரி ஸந்நிதி] தேவப்பெருமாள் ஸந்நிதிக்கு ஒரு மைல் தூரத்திலுள்ளது இந்த ஸந்நிதி. நான்முகன் செய்த யாகத்திற்குக் காரண விசேஷத்தினால் இடையூறு செய்யவந்து வேகவதி நதியாகப் பெருகின ஸரஸ்வதியின் செருக்கடங்க எம்பெருமான் அணையாகப் பள்ளிகொண்ட தலம் இது. இந்த ஸந்நிதியின் பக்கத்திலுள்ள தாமரைத்தடாகத்தில் பொய்கையாழ்வார் *வனச மலர்க்கருவதனில் வந்துதித்தார். திருமழிசையாழ்வார் இத்தலத்தில் வெகுநாள் எழுந்தருளியிருந்து இப்பெருமானுடைய ஸௌலப்ய ஸௌசீல்யங்களை உலகமறியச்செய்த இதிஹாஸம் அறியத் தக்கது. அது காரணமாகவே இப்பெருமானுக்கு வடமொழியில் 'யதோக்தகாரீ' என்றும், தென்மொழியில் 'சொன்ன வண்ணஞ்செய்த பெருமாள்' என்றும் திருநாமம் ப்ரஸித்தமாயிற்று. பொய்கையாழ்வார் பேயாழ்வார் திருமழிசையாழ்வார் நம்மாழ்வார் திருமங்கையாழ்வார் ஆகிய ஐவர் மங்களாசாஸனம் செய்த தலமிது.

**வெள்ளக்குளம்.** திருநாங்கூர்ப்பதிகள் பதினொன்றில் ஒன்று; திருமங்கையாழ்வார் பதிகம் பாடல். (சீர்காழி ஸ்டேஷன்).

**வெள்ளறை.** புண்டரீகாக்ஷப் பெருமாள். உய்யக் கொண்டார் எங்களாழ்வான் இவர்களின் திருவவதாரஸ்தலம். பெரியாழ்வாரும் திருமங்கையாழ்வாரும் மங்களாசாஸனம். இருவரும் பதிகம் பாடியுள்ளார்கள். (ஸ்ரீரங்கத்திலிருந்து 10 மைல் தூரத்திலுள்ளது.)

**வெள்ளியங்குடி.** திருமங்கையாழவார் பதிகம் பாடல். (மாயவரம் கும்பகோணம் இடையில் திருவிடை மருதூர் ஸ்டேஷனிலிருந்து 6 மைல்)

**வேங்கடம்.** (திருமலை திருப்பதி.) இத்தலம் தொண்டரடிப் பொடியாழ்வாரொருவர் தவிர மற்ற ஒன்பது ஆழ்வார்களாலும் மங்களாசாஸனம் செய்யப்பெற்றது. உலகமெல்லாமறிந்த வைபவம் பொருந்தியது இத்தலம். இவ்விடத்தில் ஸ்ரீமத் பெரிய ஜீயர் ஸ்வாமி மடம், சின்ன ஜீயர் ஸ்வாமி மடம், பரகாலஸ்வாமி மடம் முதலிய ஸ்ரீவைஷ்ணவ மடங்கள் ஸ்வாமிகளுக்கு வஸதி ஸௌகரியமளிப்பவை. இவை தவிர ஆசார்ய புருஷர்களும் ராஜாக்களும் ஸேட்டுகளும் ஏற்படுத்தியுள்ள தர்ம சாலைகளும் ராமாநுஜ கூடங்களும் ஸாதாரண ஜனங்களுக்கு உபயோகப்படுமவை. தேவஸ்தான அதிகாரிகளாலும் பல விடுதிகள் ஏற்பட்டிருக்கின்றன. லௌகிகர்களான மஹான்கள் தேவஸ்தான அதிகாரிகளுக்குத் தெரிவித்து ஷை விடுதிகளில் விசேஷ ஸௌகரிய மடைகிறார்கள், வெள்ளிக்கிழமை தோறும் திருவேங்கடமுடையானுக்குப் பெரிய திருமஞ்சனம் நடைபெறும்; அப்போது நாச்சியார் திருமொழி ஸேவிக்குமழகு அநுபவிக்கத்தக்கது. தினப்படியாகச் சிற்றஞ் சிறு காலையில் ஸுப்ரபாத ஸ்தோத்ரங்கள் கர்ணாம்ருதமாக ஸேவிக்குமழகும் ஆச்சரியமானது.


**வேளுக்கை.** (ஆளழகிய சிங்கர் ஸந்நிதி.) காஞ்சீ தீபப்ரகாச ஸந்நிதி ஸமீபத்திலேயுள்ளது. இந்த திவ்ய தேசம் வெள்ளத்தில் முழுகிப்

போனதாகச் சிலர் எழுதி வைத்திருப்பது தவறு. நன்ருக ஸேவை ஸாதிக்குமிடமேயிது. ஸ்ரீவேதாந்ததேசிகர் பணித்த காமாஸிகாஷ்டகம் என்ற ஸ்தோத்திரம் இத்தலத்து விஷயமானதே. 'வேள் இருக்கை' என்பது வேளுக்கை யென மருவியுள்ளது. ஆசையோடு எழுந்தருளி யிருக்குமிடம் என்று பொருள். காமாஸிகா என்றதன் பொருளுமிதுவே. * காமாத் அதிவஸந் ஜீயாத் கச்சிதத்புதகேஸரீ * என்றதுமிப் பொருளை வற்புறுத்தும். பேயாழ்வாரும் திருமங்கையாழ்வாரும் மங்களா சாஸனம் செய்தருளின தலமிது. துணுக்கைப் பாடல்.

**வைகுந்தம்.** ஆழ்வார் திருநகரி நவதிருப்பதிகளுள் ஒன்று. நம்மாழ்வார் துணுக்கைப் பாடல். ஸ்ரீவைகுண்டம் ஸ்டேஷன்.

**வைகுந்த விண்ணகரம்.** திருநாங்கூர்த் திருப்பதிகள் பதினொன்றில் ஒன்று; திருமங்கையாழ்வார் பதிகம் பாடல். (சீர்காழி ஸ்டேஷன்).

ஸ்ரீவைஷ்ணவ மஹாநிதியில் மூன்ருவது பரிச்சேதம் முற்றிற்று.



விளம்பிஞு மாசித்தெப்பத் திருநாளில் திருக்கோட்டியூரில் ஆப்தகோஷ்டி

# திருமயிலைப் பேயாழ்வார் திருமஞ்சனக் கட்டியம்.



திருமயிலை பேயாழ்வார்

தேவ! விஜயீபவ!

உத்யத்பாநுஸஹஸ்ரபாஸ்வரதநும் சுப்ரோர்த்வபுண்ட்ரோஜ்வலம்
கௌசேயாம்பர சோபிநம் ஸுருசிரஸ்வச்சோபவீதாந்விதம்.
முக்தஸ்மேரமுகம் தயாஞ்சிதத்ருசம் பத்தாஞ்ஜலிம் பாஸ்வரம்
ஸ்ரீமந்தம் மஹதாக்யஸூரிமநகம் ஸம்ஸேவிஷீயாநிசம்.

1. நல்லார் நவில்கின்ற நன்மயிலை மாநகரில்
   நலமாக நாமுய்ய வந்த பெருமாள்!

2. நன்னாரணன்நீங்க மற்றொரு முற்றதுணை
   அன்றே நமக்கென் றுரைத்த பெருமாள் !

3. கல்லாத வாதிகளு மல்லாத மாயிகளும்
   நில்லாது நீக்கியருள் நல்ல பெருமாள் !

4. கலைவலவர் பலர்வாழும் மயிலையெனு மாநகரம்
   தழைத்தோங்கக் காதலித்து வந்துதித்த நற்பெருமாள் !

5. எல்லாரு முய்யவென நல்லான நான்மறையை
சொல்லால் தொகுத் தருளவல்ல பெருமாள்!

6. ஏரார்ந்த மணிமுடிமேல் சீரார்ந்த துளவணியும்
கேசவனார் புகழ்மாலை யேத்தியுகந்தருள் பெருமாள்!

7. மல்லாண்ட திண்டோளன் மகிமைசொலும் மழிசையர்கோன்
மதிபெற்று வாழ்ந்திடவே அருள்செய்த மாண்பெருமாள்!

8. மதிபெற்ற ஞானியர்கள் துதிசொல்லி யனுதினமும்
தொழுதேத்தி யுய்ந்திடவே மயிலைநகர் வந்துதித்தோய்!

9. என்னாழி வண்ணன்பால் திருக்கண்டேன் திருமேனி
நிறங்கண்டே னாழிகண்டே னென்றுரைத்த நாவலவா!

10. எம்பிரான்றன் கழல்கண்டேன் ஏழ்பிறப்பும் யானறுத்தேன்
வருநரகம் தீர்மருந்து கண்டேனென் றுரைத்தபிரான்!

11. மாகடலி னீருள்ளான் மனத்துள்ளான் மாமலராள்
தனத்துள்ளா னென்றுரைத்த தனிஞானப் பெருங்கடலே!

12. மூவுலகு முண்டுமிழ்ந்து நீரேற்று மூவடியால்
தாவடியிட் டளந்தபிரான் தாளிணையே யடைந்துய்ந்தோய்!

13. திருந்தியசீர்ச் செங்கண்மால் திருக்குணமே தாரகமாய்
மருந்துமது பொருளுமது அமுதுமது வென்றுரைத்தோய்!

14. அலர்மேலோன் கால்கழுவக் கங்கைநீர் கான்றகழல்
தொழநெஞ்சே வாவென்று துணைதேடி நின்றபிரான்!

15. மண்ணுலக முண்டுமிழ்ந்த வண்டறையுந் தண்டுளபக்
கண்ணனையே காணவெண்ணிக் காதலித்த கற்பகமே!

16. கருமா முகில்வண்ணன் கார்க்கடல் நீர்வண்ணன்
திருமா மணிவண்ணன் தேசுரைத்த தேசுடையோய்!

17. நால்வேதத் துள்ளானே பாற்கடல் நீருள்ளானே
பாம்பணையின் மேலானே யென்றென்று போற்றிடுவோய்!

18. ஆகாய மூடறுத்து அண்டம்போய் நீண்டவொரு
மாகாயப் பெருமானை மதித்திறைஞ்சும் மாண்புடையோய்!

19. வேதத்தான் வேங்கடத்தான் விண்ணோர் முடிதோயும்
பாதத்தான் பாதமே பணிந்துய்ந்த பரஞ்சோதி!

20. அனந்த னணைக்கிடக்கும்மால் அடியேன் மனந்தனணைக்
கிடக்குமிது காணீரென் றுகந்துரைத்த வுத்தமனே!

21. ஒருவல்லித் தாமரையா ளொன்றியசீர் மார்பனுறை
திருவல்லிக் கேணிசென்று தொழுதுகந்த தூமனத்தோய்!

22. எந்தை பெருமான்த னிணையடிக்கே யாளாகி
மறவாது வாழ்த்தியிடும் மாண்புடைய பெருமானே!

23. வாமனனாய் மாவலிபால் மூவடிமண் ணிரந்தளந்த
நெடுமால்த னிணையடிக்கே யேழ்பிறப்பு மாளானோய்!

24. தெருளாத பிள்ளையா யாலிலைமேல் சேர்குழவி
யருளாலே யிருளற்ற நெஞ்சுடைய நின்மலனே!

25. என்தன் திருமாலே செங்கணெடி யானே
எங்கள் பெருமானே யென்றுருகு மெழில்மனத்தோய்!

26. தேசுடைய சக்கரத்தாய் சங்கினாய் சார்ங்கத்தாய்
வாசமலர்த் துழாய்மாலை முடியாயென் றுகந்துரைத்தோய்!

27. சுடராழி யொன்றுடையான் சூழ்கழலே நாளும்
தொடராழி நெஞ்சேயென் றுகந்துரைத்த தூய்மதியோய்!

28. விழுதுண்ட வாயானை மால்விடையேழ் செற்றானை
வானவர்க்கும் சேயானை வணங்கியுய்ந்த பெருமானே!

29. வேங்கடமும் வெஃகாவும் வேளுக்கைப் பாடியுமே
உகந்துறையு மெந்தைகழ லடைந்துய்ந்த வேதியனே!

30. மறைமுடியும் பாற்கடலும் பாடகமு மென்மனமும்
குடந்தையுமே குடிகொண்டா யென்றுரைத்த குணக்கடலே!

31. மந்தரத்தால் மாகடலைக் கடைந்தமுத மந்தரத்தார்க்கு
ஈந்தபிரா னருளாயென் றிரந்தேத்து மெழில்மதியோய்!

32. கனலாழி வெண்சங்கம் கதைசார்ங்கம் வெஞ்சுடர்வாள்
இவையேந்தும் பெருமானை யிறைஞ்சியுய்ந்த பெருமானே!

33. எரிசுடரும் மால்வரையு மெண்டிசையு மண்டத்
திருசுடரு மிறையேயென் றுகந்தேத்து முயர்மதியோய்!

34. விண்ணெடுங்கக் கோடுயரும் வீங்கருவி வேங்கடத்தான்
உள்ளுவா ருள்ளத்தே யுளன்கண்டா யென்றுரைத்தோய்!

35. குன்றம் குடையாக ஆகாத்த கோவலனே
குழலூது மணிவண்ணா என்றுரைத்த குணக்கடலே!

36. மதகளிற்றின் மருப்பொசித்து மேதினியை யிடந்தெடுத்த
பேரகலப் பேரார மார்வனையே உகந்துரைப்போய்!

37. பலகதிர்கள் பாரித்த பொன்முடியா னடியிணைக்கே
பூரித்துத் துதிமாலை யிட்டருளும் பூரணனே !

38. துரக வாய்கீண்ட துழாய்முடியாய் நங்கள்
நரகவா யதுகீண்ட நாரணனே யென்றழைப்போய் !

39. மாவா யுரம்பிளந்து மாமருதி னூடுபோய்த்
தேவாசுரம்பொருத தேவனையே துதிசெய்வோய் !

40. மணிநீர்ச் சுனைவளர்ந்த மாமுதலை கோள்விடுத்த
அணிநீல வண்ணத்த னடிபணிந்த அற்புதனே !

41. வெஃகாவே சேர்ந்தானை மெய்ம்மலர்தூய்க் கைதொழுதால்
அஃகாவே தீவினையென் றாய்ந்துரைத்த அருள்முகிலே !

42. விரையார் நறுந்துழாய் வீங்கோத மேனி
நிரையார மார்வனையே நினைந்துருகி நின்றானே !

43. கொங்கணைந்து வண்டறையுந் தண்டுழாய்க் கோமானை
எங்கணைந்து காண்டுமினி யென்றுரைத்த பெருமானே !

44. சிறைசெய்த வாணன்தோள் செற்றான் கழலிணையே
நிறைசெய்து நெஞ்சார நினைந்துகந்த நின்மலனே !

45. உய்த்துணர் வென்னு மொளிகொள் விளக்கேற்றி
வைத்தவனை நாடி வலைப்படுத்த வள்ளலே !

46. நரகத்து நம்மை நணுகாமல் காப்பவனும்
நாரா யணன்கழலே நாடிநின்ற நாவலவா ?

47. தொட்டபடை யெட்டுந் தோலாத வென்றியா
னட்டபுய கரத்தானை யடைந் துய்ந்த ஆரமுதே !

48. கோள்முதலை துஞ்சக் குறித்தெறிந்த சக்கரத்தான்
தாள்முதலே சார்வென்று சதிர்கண்ட கற்பகமே !

சீராரும் மாடத் திருக்கோவ லூரதனுள்
காரார் கருமுகிலைக் கண்டுகந்த கலைவலவா !

அல்லன்ன குழலும் அகன்ற முகமும்
வில்லன்ன புருவமும் விசால நயனமும்

எள்ளுப்பூ நாசியும் இணைவள்ளக் காதும்
சொற்ப்ரணவ மொழியும் சிவந்த வதரமும்

வெள்ளென்ன வேட்டியும் விளங்கு மணியஞ்சலியும்
நேரான புண்டரமும் நிறைந்த மணிவடமும்

கதித்த துடையும் கணைமுழந் தாளும்
பல்லவப் பவழத்தைப் பழித்த விரலடியுமாய்

தேவரீர் திருமஞ்சனங் கண்டருள வீற்றிருக்கு மிவ்வழகு
ஏதேனும் ஜகன்மோஹனமோ? ஸ்ரீவைஷ்ணவ ஸர்வஸ்வமோ?

வேள்வியின் பயனோ? வேதாந்த விழுப்பொருளோ?

நாங்களீ தேதென்று மறியா விவ்வழகுடன் ஊழிதொறு
மூழிதொறும் வாழ்ந்திடுக வாழ்ந்திடுகவே முநிஸார்வ பௌமனே!

1. கலங்காப் பெருநகரம் காட்டுவான் கழலிணையே
நாடோறும் துதித்திறைஞ்சி நின்ற களைதானோ?

2. சென்று குறளுருவாய் முன்னிலம் கைக்கொண்ட
முதல்வனையே முப்போதும் மொழிந்துநின்ற களைதானோ?

3. திருமா மணிவண்ணன் செங்கண்மா லெங்கள்
பெருமா னடியிணையே துதித்துநின்ற களைதானோ?

4. கற்றுக் குணிலை விளங்கனிக்குக் கொண்டெறிந்தான்
வெற்றிப் புகழ்களையே மொழிந்துநின்ற களைதானோ?

தேவரீர் மஞ்சன மாடிய ருள்வதே.

ஸ்நாநீயம் கநஸார குங்கும லவங்கைலாதிபிர் வாஸிதம்
ஸௌவர்ணேஷு கடேஷு சுத்தஸலிலம் பூர்ணம் புரஸ் திஷ்டதி
கௌசேயஞ்ச சரச்சசாங்கதவளம் ஸித்தாவயம் கிங்கரா:
காருண்யம் கருணாநிதிர் விதநுதாம் ஸ்ரீமாந் மஹாந் யோகிராட்.

அருளப்பாடு சங்கதாரை பத்மதாரை ஸஹஸ்ரதாரை
உபயவேத கீதமங்களவாத்யம்.

ஸ்ரீ காஞ்சீ பிரதிவாதி பயங்கரம்
அண்ணங்கராசாரியர் எழுதிய
ஸ்ரீ வைஷ்ணவ மஹாநிதி முற்றிற்று.

Rgd. No. 2975 ஸ்ரீராமாநுஜன்

கிடைக்குமிடங்கள்:—

(1) க்ரந்தமாலா ஆபீஸ், காஞ்சீபுரம்.

(2) கராலபாடி ராதாகிருஷ்ணய்யா,
229, கோவிந்தப்ப நாயகன் தெரு, மதராஸ்—1

(3) G. ரங்கைய நாயுடு,
26, குருவப்ப செட்டி தெரு, சிந்தாத்ரிபேட்டை, மதராஸ்—2
(இவர் சென்னையில் பிரசாரம் செய்ய நியமிக்கப்பட்டவர்.)

If un-delivered please return to:

**P. B. ANNANGARACHARYA,**
L. KANCHEEPURAM.

Edited and Published by P. B. Annangaracharya Swami
for Madras Satgrantha Prakasana Sabha.
Printed by T. A. P. Srinivasavaradan at Sri Venkateswara Press,
Sannidhi Street, L. Kancheepuram.